பக்கங்கள்: 15

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 ஐப்பசி 19 சனிக்கிழமை 05.11.2022 கதிர் 363

### இனி இது ரகசியம் அல்ல!

தேசிய இனப் பிரச்சினைக்கு விரைந்து தீர்வு காண்பது குறித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கருத்து வெளியிடுகிறார். பிரதமர் தினேஷ் குணவர்த்தன தானும் தன் பங்குக்குத் தகவல்களை முன் வைக்கிறார். மூத்த அமைச்சர்

☞ 2

## மட்டக்களப்புப் பல் சமயத் தலைவர்கள் கோணேஸ்வரத்தில்!





மட்டக்களப்பு மாவட்ட பல்சமய ஒன்றியத்தின் மதத் தலைவர்கள். நேற்று திருக்கோணமலையில் திருக்கோணேஸ்வர ஆலய வளாகத்தில் ஆலய வளாக பார்வையிடலிலும், தரிசிப்பிலும், உரையாடலிலும் ஈடுபட்டனர். அதைத் தொடர்ந்து அதி வணக்கத்துக்குரிய ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அவர்களை சந்தித்து அவர்கள் உரையாடியனார்கள்.

# சமஷ்டி முறைத் தீர்வு என்பதில் தமிழ்த் தலைமைகள் ஒற்றுமை

### அமைச்சர் நிமால் சிறிபாலவுக்கு சுமந்திரன் பதிலடி
### சாக்குப் போக்குக் கூறும் சமாளிப்பு வேண்டாமாம்




கொழும்பு,நவம்பர் 05


"வடக்கு, கிழக்குத் தமிழர்களின் தலைவர்கள் தங்களுக்குள் கட்சிகள், அணிகளாகப் பிரிந்து நின்றாலும், தேசிய இனப் பிரச்சினைக்கு சமஷ்டி முறையிலான தீர்வே ஒரே வழி என்பதில் மிக உறுதியாகவும், ஒருமித்த நிலைப்பாட்டிலும் உள்ளனர். எனவே தமிழ்த் தலைவர்கள் பிளவு பட்டிருக்கின்றார்கள் என்று சாக்குப் போக்குக் கூறி, சமாளிப்பதை விடுத்து, சமஷ்டித் தீர்வுக்கு வழி பாருங்கள்."

- இப்படி அரசின் மூத்த அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவுக்கு பதிலடி கொடுத்திருக்கின்றார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரன் எம்.பி.

☞ 2

## நொச்சிமோட்டையில் சொகுசு பஸ் தலைகீழாகப் புரண்டு பெரும் விபத்து

### அதிகாலை மூவர் பலி; 20க்கும் அதிகமானோர் படுகாயம்



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், நவ.05

யாழில் இருந்து கொழும்பு சென்ற சொகுசு பஸ் ஒன்று இன்று அதிகாலை ஒரு மணிளவில் ஏ9 வீதியில் நொச்சிமோட்டைப் பாலத்துடன் மோதி மிக மோசமான விபத்திற்குள்ளானதாக ஆரம்பகட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த விபத்தில் குறைந்தது

☞ 2

## வன்முறையை நாடுவோரை சஜித் தன்னிடம் வராதீர்கள் என்கின்றார்

### அவர் பகிரங்க அறிவிப்பு

கொழும்பு,நவம்பர் 05

வன்முறையைத் தூண்டி விடும் எவரும் என்னோடு இணையத் தேவையில்லை. அமைதியாக - நேர் வழியில் - இணைந்து, வன்முறை இல்லாத அமைதியான நேர்வழிப் பயணத்தில் பொறுமையாக பயணிப்பது என்னுடைய விருப்பம்.

- இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸா தெரிவித்துள்ளார்.

கல்கமுவ பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து

☞ 2

## மீன் லொறியுடன் மோதுண்டு காட்டு யானைக் குட்டி சாவு!



புத்தளம் - அநுராதபுரம் பிரதான வீதியின் கருவலகஸ் வெவ 12 ஆம் கட்டைப் பகுதியில் யானைக் குட்டியொன்று நேற்று அதிகாலை மீன்களை ஏற்றிச் சென்ற லொறியில் மோதுண்டு

☞ 2

## எதிரணியின் ஒத்துழைப்பின்மையால் தாமதம் எனச் சபாநாயகர் சமாளிப்பு!

### ஜனாதிபதியின் அதிருப்திக்கு அவர் பதிலளிப்பு



கொழும்பு,நவ.05

எதிர்க்கட்சியின் பிரதிநிதிகள் நியமிக்கப்படாமையால் துறைசார் மேற்பார்வைக் குழுக்களை செயற்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

பரிந்துரைகளுக்கு அமைய 17 நாடாளுமன்ற துறைசார்

☞ 2

## மைத்திரிக்கு கொரோனா



முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்குகொரோனாவைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளது.

கொரோனா தொற்றுக்கான அறிகுறிகள் தென்பட்டமையை

☞ 14

## ஆசிரிய, மாணவர் சீருடையில் எந்த மாற்றமும் இல்ல்சியாம்!

பாடசாலைகளில் தற்போது நடைமுறையில் உள்ள ஆசிரியர்களுக்கான ஆடைக் கட்டுப்பாடுகளில் மாற்றம் செய்யப்பட மாட்டாது என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

☞ 2

## குரங்கு அம்மை நோயாளி இலங்கையில் முதல் நபர்

### டுபாயில் இருந்து வந்த இளைஞர்

இலங்கையில் முதலாவது குரங்கு அம்மை நோயாளி அடையாளம்காணப்பட்டுள்ளார்எனத்தெரிவிக்கப்படுகிறது.

கடந்த முதலாம் திகதி டுபாயில் இருந்து வந்த 20 வயதுடைய இலங்கை இளைஞருக்கே

☞ 2

## முதுகை நிமிர்த்தி முடிவு எடுக்க முடியாத அரசியல்வாதியே சஜித்

### போட்டுத் தாக்குகிறார் ஜே.வி.பி.செயலர்

முதுகை நிமிர்த்தி முடிவெடுக்க முடியாத அரசியல்வாதி சஜித் பிரேமதாஸ என மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பியின்) பொதுச்செயலாளர் ரில்வின் சில்வா கடுமையாக சாடியுள்ளார்.

அண்மையில் கொழும்பில் ஏற்பாடு

☞ 2

## நீதியைப் பெற்றுக்கொடுக்க துரிதமாகச் செயற்படுங்கள்!

### நீதி அமைச்சருக்கு அமெரிக்கத் தூதர் அறிவுரை

கொழும்பு,நவ.05

வடக்கு, கிழக்கில் நல்லிணக்கத்தை கட்டியெழுப்ப அரசாங்கம் முன்னெடுத்துவரும் பணிகள் சிறப்பானதாக உள்ள போதிலும், நல்லிணக்கத்தை வலுப்படுத்தவும், பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீதியைப்

☞ 14

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நிமால் சிறிபால டி சில்வாவும் அது பற்றிப் பேசுகின்றார்.

ஏதோ வாய்ப்புகள் அரும்புகின்றன போன்ற ஓர் எண்ணப்பாடு வருகின்றது.

இந்தப் பின்புலத்தில் நேற்று ஒரு முக்கிய சந்திப்பு நடப்பதாக அறிந்திருந்தேன். இந்த முயற்சிகளில் அந்தச் சந்திப்பு ஓர் உத்வேகத்தை ஊட்டும் என்று என் மனதுக்குள் நான் மனப்பால் குடிப்பதற்கும் தவறவில்லை. ஆனால் விடயம் நடக்காமல் தள்ளிப் போய்விட்டது.

நேற்று சந்திக்க இருந்தவர்கள் இருவருமே இலங்கையின் தேசிய இனங்களின் மூத்த தலைவர்கள். இருவருமே இன்றைய நிலையில் தத்தமது இனங்களின் பிதாமகர்கள்தாம்.

ஒருவர் - வயதால், மூப்பால், தளர்ந்திருப்பவர். மற்றவரும் அந்த நிலைக்குத் தயாராகும் வயதுதான்.

தளர்ந்தவரை மற்றவர் நேரில் போய்ப் பார்த்து, சுகம் விசாரிப்பது தான் ஏற்பாடு. ஆயத்தங்கள் நடந்தன. ஆனால் கடைசி நேரத்தில் விடயம் ஒத்திவைக்கப்பட்டு விட்டது.

போய்ப் பார்த்து, சுகம் விசாரிக்க வேண்டியவருக்கு முதுகில் திடீரென ஒரு நோவு. வாகனப் பயணத்தை சில தினங்களுக்குத் தள்ளி வைத்தல் நல்லது என்று மருத்துவ ஆலோசனை வழங்கப்பட்டது போல.

அதனால் சந்திப்பு நேற்று நடக்கவில்லை. கடைசி நேரத்தில் ஒத்திவைக்கப்பட்டு விட்டது.

தேசிய இனப் பிரச்சனைக்குத் தீர்வு தேடும் தற்போதைய முயற்சிகளுக்கு சற்று வேகத்தை - தூண்டலை - ஊக்கவிப்பை இந்தச் சந்திப்பு தரும் என நான் நம்பியிருந்தேன். அது, தள்ளிப்போனதில் சிறிது ஆதங்கம் உண்டு.

என்னதான் அரசியல் ரீதியாக மோதிகொண்டாலும், மூத்த அரசியல் தலைவர்கள் இடையே அரசியல் அனுபவம், மரியாதை ஆகியவற்றின் அடிப்படையில் பரஸ்பர புரிந்துணர்வு - 'கெமிஸ்ட்ரி' - உண்டு.

அரசியல் தார தம்மிய நிலை பார்க்காமல், அரசியல் அறிவுக்கும், முதிர்ச்சிக்கும் மாத்திரம் முன்னுரிமை கொடுத்து, சுகம் விசாரிக்கத் தேடிச் சென்று பார்க்கும் தீர்மானத்தை நம் பிதாமகர் எடுத்தமை நல்ல செய்கை - சமிக்ஞை என்று நான் நினைக்கிறேன். நீங்கள் என்னை நினைக்கின்றீர்கள் வாசகர்களே...?

- மின்னல் -

## சமஷ்டி முறைத் தீர்வு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
'பிளவு பட்டிருக்கும் தமிழ் அரசியல்வாதிகள் ஓர் அணியில் இணைந்தால் தான் அரசுடன் தீர்வுக்காகத் திறந்த மனதுடன் பேச முடியும்' என்று அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்த கருத்துக்கு, தற்போது நேபாளத்தில் தங்கி உள்ள எம்.ஏ.சுமந்திரன் எம்.பி. அங்கிருந்து, தமது பிரதிபலிப்பை வெளிப்படுத்தி உள்ளார்.

"தமிழ்த் தலைமைகள் வெவ்வேறு கட்சிகளில் வெவ்வேறாகப் பிரிந்து நிற்கலாம். அவர்களின் அணுகுமுறைகள், போக்குகள் வேறுபடலாம். ஆனால் தேசிய இனப் பிரச்சினைக்கு சமஷ்டி முறையிலேயே தீர்வு என்பதில் அவர்கள் அனைவரும் ஒருமித்த நிலைப்பாட்டிலேயே உறுதியாகவும் தெளிவாகவும் உள்ளனர்.

"ஆகவே தமிழ் தலைமைகளிடையே பிளவு, வேறுபாடு, கருத்து முரண்பாடு, குத்துவெட்டு என்று சாக்குப் போக்குச் சொல்லி விடயத்தை சமாளிப்பதை விடுத்து, தமிழ் தலைமைகளின் இந்த ஒன்றுபட்ட நிலைப்பாட்டை கவனத்தில் எடுத்து, அதில் பொதிந்துள்ள நீதி, நியாயத்தை புரிந்து கொண்டு, விரைந்த தீர்வுக்கு முன் வாருங்கள்! காலத்தை இழுத்தடித்துச் சாக்குப் போக்குக் கூறிச் சமாளிப்பதை விடுத்து" - என்று குறிப்பிட்டார் சுமந்திரன் எம்.பி.

## நொச்சிமோட்டையில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மூவர் உயிரிழந்தனர். மேலும் இருபதுக்கும் அதிகமானோர் படுகாயமடைந்துள்ளனர் என அதிகாலைத் தகவல்கள் தெரிவித்தன.

வடமராட்சியில் இருந்து புறப்பட்டுச் சென்ற பலுான் ரக பஸ்ஸே தலைகீழாக புரண்டு சேதமடைந்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டது.

இதன்போது மூவர் பரிதாபகரமாக உயிரிழந்த அதே நேரம் இருபது பேர் படுகாமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். விபத்தில் உயிரிழந்த ஒரு பெண் மற்றும் இரு ஆண்களின் சடலம் வவுனியா ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன.

பாலத்தில் மோதிப் புரண்ட பஸ்ஸை பின்னால் வந்த அடுத்த பஸ்ஸும் மோதியதாக ஒரு தகவல் தெரிவித்தது

இந்த விபத்து தொடர்பில் ஓமந்தை பொலிஸார் மேறகொண்டு விசாரணை நடத்தி வருகின்றனர்.

## வன்முறையை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனை தெரிவித்துள்ளார். புதனன்று இடம்பெற்ற எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின் போதுசிலர்எனக்குஎதிர்ப்புதெரிவித்தனர். நான் அந்த இடத்தை விட்டுச் சென்று விட்டேன். அதனால் என்னை எல்லோரும் வெறுத்தனர்.

அது, பரவாயில்லை. நான் அமைதியான வழியில் போராட்டங்களைச் சந்திக்கத் தயார். அவ்வாறான பயணத்தில் இணைய விரும்புவர்கள் யாரும் என்னோடு இணைந்து கொள்ளலாம். வன்முறைகளோடு பயணிக்க நான் விரும்பவில்லை. அனைவரும் அமைதியான வழியில், நேர்வழியில் சென்று, அரசை வீழ்த்துவதற்கு நாம் திட்டமிட்டு இருக்கின்றோம். அவ்வாறு இணையும் எவரோடும் நான் இணைந்து செயல்பட தயார். அதை விட்டு நாட்டில் வன்முறையைக் கட்டவிழ்த்து விட்டு, முன்னைய அரசாங்கத்தை போல் நான் செயல்பட மாட்டேன் .கல்கமுவ, யூ.பி வன்னி நாயக்கர் தேசிய பாடசாலைக்கு 39 ஆவது பஸ்ஸை நன்கொடையாக வழங்கிய பின் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

வன்முறைகளோடு ஒரு பொழுதும் பயணிக்க போவதில்லை. அமைதியான நேர்வழியில் சென்று மக்களுக்கு தேவையானவற்றை பெற்றுக் கொடுப்பதையே விரும்புகிறேன். - அவர் குறிப்பிட்டார்.

## மீன் லொறியுடன் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
விபத்துக்குள்ளானதில் உயிரிழந்துள்ளது.

முல்லைத்தீவு பகுதியிலிருந்து புத்தளம் ஊடாக கொழும்புக்கு மீன்களை ஏற்றிச் சென்ற மீன் லொறியில் மோதுண்டே குறித்த யானைக் குட்டி உயிரிழந்துள்ளதாக வனஜீவராசிகள் திணைக்கள கட்டுப்பாட்டுப் பிரிவினர் தெரிவித்தனர்.

இவ்வாறு உயிரிழந்த யானைக்கு நிகாவெரெட்டிய மிருக வைத்தியர் இசுரு வினால் பிரேத பரிசோதனை முன்னெடுக்கப்பட உள்ளதாக வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

உயிரிழந்த யானைத் தொடர்பில் வனஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் மற்றும் கருவலகஸ்வெவ பொலிஸார் லொறியின் சாரதியிடம் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர் எனத் தெரிவித்தனர்.

## ஆசிரிய, மாணவர் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஆசிரியர்களுக்கான ஆடையை மாற்றுவதற்கான பொறுப்பு கல்வி அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக நேற்று (வெள்ளிக்கிழமை) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்திருந்தார்.

இதற்கு பதிலளித்த கல்வி அமைச்சர், எக்காரணம் கொண்டும் ஆசிரியர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களின் ஆடையில் மாற்றம் செய்யப்பட மாட்டாது என தெரிவித்துள்ளார்.

அரச சேவையின் கௌரவத்தை பேணும் வகையில் அரச உத்தியோகத்தர்களுக்காக வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கையை ஆசிரியர்களுக்கும் அமுல்படுத்த வேண்டுமென இலங்கை ஆசிரியர் சங்கம் அண்மையில் வேண்டுகோள் விடுத்திருந்தது.

பொருளாதார நெருக்கடியை கருத்திற்கொண்டு அதிக விலை கொடுத்து சேலைகளை வாங்குவதில் சிக்கல் நிலவி வருவதாக சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்திருந்தார்.

அத்தோடு, போக்குவரத்து சிரமம் காரணமாக ஆசிரியர்கள் பலர் சைக்கிள், மோட்டார் சைக்கிள்களில் பாடசாலைக்கு வருகின்றனர் எனவும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

எனவே, புடவை அல்லது ஒசரியை விட எளிதான எளிய உடையை அணிவதன் மூலம் ஆசிரியர்களால் மாணவர்களை கையாள்வதில் திறமையாக செயற்பட முடியும் என்றும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## குரங்கு அம்மை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இத்தொற்று ஏற்பட்டுள்ளது.

காய்ச்சல், தோலில் கொப்பளங்கள், வீங்கிய நிணநீர் முனைகள் போன்ற அறிகுறிகளுடன் அவர் பாலியல் நோய் பிரிவிற்கு வருகை தந்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மருத்துவர்களின் சந்தேகத்தின் அடிப்படையில், அவரை மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்திற்கு செல்லுமாறு பரிந்துரைத்துள்ளனர்.

அங்கு நடத்தப்பட்ட பரிசோதனைகளின்படி, குரங்கு அம்மைக்கான குறிப்பிட்ட மரபணுக்களை அடையாளம் காணப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அவர் தற்போது கொழும்பு ஐ.டி.எச். வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

## எதிரணியின் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
மேற்பார்வைக் குழுக்கள் ஸ்தாபிக்கப்பட வேண்டியுள்ள நிலையில் அவற்றுக்கான தலைவர்கள் இதுவரை நியமிக்கப்படவில்லை என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சபாநாயகருக்கு நேற்று முன்தினம் எழுதிய கடிதத்தில் தெரிவித்திருந்தார்.

மேலும் நீண்டகால முறைமை மாற்றங்களை கொண்டுவருவதற்கான முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்துவதில் நாடாளுமன்றத்தில் தாமதம் காணப்படுவதாகவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தனது கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

இந்தநிலையில் இதற்கு பதில் வழங்கும் வகையில் அனுப்பிவைக்கப்பட்டுள்ள கடிதத்திலேயே சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர்களுக்கு பல தடவைகள் அறிவிக்கப்பட்டதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். எனினும், அதற்கு இதுவரை சாதகமான பதில் கிடைக்கவில்லை எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அடுத்த வாரம் நடைபெறும் நாடாளுமன்ற அமர்வின் பின்னர் பிரதிநிதிகளை நியமிப்பது தொடர்பிலான தீர்மானத்தை மேற்கொள்ள எதிர்பார்க்கிறார் எனவும் சபாநாயகர் தெரிவித்துள்ளார்.

## முதுகை நிமிர்த்தி முடிவு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
செய்யப்பட்டிருந்த ஆர்ப்பாட்டத்தில் தேசிய மக்கள் சக்தி பங்கேற்காமை தொடர்பில் ஊடகவியலாளர்கள் வினவிய போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் தொடர்ந்தும் கருத்துத் தெரிவித்த அவர் -

நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட சட்ட மூலத்திற்கு எதிராக தீர்மானம் எடுக்க முடியாத ஒருவருடன் நிற்க தாம் தயாராக இல்லை.

அதுமட்டுமன்றி அப்படிப்பட்டவர்களுடன் இணைந்து நிற்க தேசிய மக்கள் சக்தியும் தயாராக இல்லை.

முடிவெடுக்க முடியாத ஒருவருடன் நின்று ஜனநாயகத்தை வெல்ல முடியுமா? -என்றும் கேள்வி எழுப்பியுள்ளார்.




# இன்னும் இரண்டு நாட்களில் பதிவுகள் நிறைவடைகின்றன

## அமெரிக்க லொத்தர் விசா

நீங்களும் அமெரிக்காவில் குடும்பத்துடன் வாழலாம்...

ஒரு உறுதியான முடிவு உங்கள் வாழ்க்கையை மாற்றிவிடும்!





அலுவலர்களின் நன்மை கருதி சனி, ஞாயிறு உட்பட இரவு 7 மணிவரை பதிவுகள் மேற்கொள்ளப்படும்

மிக மிக அரிய சந்தர்ப்பம் தவறவே விடாதீர்கள்

அலட்சியம் வேண்டாம்

கடந்த காலங்களில் வாய்ப்புக்களை தவறவிட்டு விண்ணப்பிக்காதவர்கள் அப்படியே இருக்க நம்பிக்கையுடன் எம்மூடாக விண்ணப்பித்தவர்கள் விசா பெற்று அமெரிக்கா சென்றுவிட்டார்கள்.

நீங்கள் கூட அதிஸ்டசாலியாகலாம்

ஆச்சரியம்! ஆனால் உண்மை.

18 வயதிற்க்கு மேற்பட்ட யாரும் விண்ணப்பிக்கலாம்

அனைவருக்குமான இலவச சந்தர்ப்பம்

திருமணமானவர்களுக்கு ஒரே நேரத்தில் இரண்டு வாய்ப்புக்கள்

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற ஓர் அரிய சந்தர்ப்பம்

படித்தவர்கள், பட்டதாரிகள், அரச வேலை செய்பவர்கள், தனியார் துறையில் வேலை செய்பவர்கள், வேலையில்லா பட்டதாரிகள், A/L பரீட்சை எடுக்கும் மாணவர்கள், வெளிநாட்டில் படிக்க விரும்பும் மாணவர்கள் அனைவருக்கும் இது அரிய இறுதி சந்தர்ப்பமாகும். பயன்படுத்துங்கள்! பலன் பெறுங்கள்!

240 இதுவரை எம்மூடாக விண்ணப்பித்தவர்களுள் பேருக்கு மேல் அமெரிக்காவில் வாழ்கின்றார்கள்.

இளைஞர்களே, யுவதிகளே வெளிநாடு செல்ல காசில்லையா?

இலட்சக்கணக்கான காசை கொடுத்து ஏமாறுவதற்கு பதில் இலவசமாக கிடைக்கும் 55'000 பேருக்கான அதிஸ்ட வாய்ப்பை தவறவிடுவானேன்?

உங்களுக்கு விசா கிடைத்தால் உங்களுடன் சேர்த்து உங்கள் (காதலன்/காதலி) எதிர்கால வாழ்க்கைத்துணையையும் அழைத்துச்செல்லலாம்

**0768226244**
**0768226240**

நீங்கள் தவறவிடும் ஒவ்வொரு கணமும் இன்னொருவருக்கான விசா வாய்ப்பாக அமையும்

பதிவுகளுக்கு Passport தேவையில்லை

முக்கிய அறிவித்தல்

ஒருவிதத்தில் நாம் அனைவரும் அதிஷ்டசாலிகள்தான் கடந்த வருடங்களில் கட்டாயமாக்கப்பட்ட பாஸ்போட் நடைமுறை இந்த வருடம் தளர்த்தப்பட்டுள்ளது.இதன்மூலம் இலங்கையில் உள்ள மக்கள் அனைவரும் பாஸ்போட் இல்லாமலேயே வீசா வாய்ப்பினை பெற்றுக்கொள்ளலாம்.

விண்ணப்ப முடிவு திகதி - 08-11-2022

சிந்தியுங்கள்!!! உடனடியாக பதிவுசெய்யுங்கள்!

கடைசி 7 நாட்களும் உலகம் முழுவதிலுமிருந்து அதிக விண்ணப்பங்கள் போடப்படுவதால் அமெரிக்க லொத்தர் இணையமானது அடிக்கடி முடங்குவதால் இறுதிக்கட்ட ஏமாற்றங்களை தவிர்க்க, முடிந்தளவுக்கு முன்னரே பதியுங்கள்.

பதிவுகள் நடைபெறும் எமது கிளைகள்-விபரங்களுக்கு அழையுங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | -0777068777 | திருகோணமலை | - 0768226237 | கிளிநொச்சி | -0768226240 |
| நெல்லியடி | -0776699892 | கொடிகாமம் | - 0764550675 | சாவகச்சேரி | -0768226242 |
| புதுக்குடியிருப்பு | -0764550673 | சுன்னாகம் | - 0764550670 | மானிப்பாய் | -0768226238 |
| கோப்பாய் - | -0768226238 | புத்தூர் | - 0764550671 | பருத்தித்துறை | -0768226230 |
| வல்வெட்டித்துறை | -0776697960 | பண்டத்தரிப்பு | - 0777718322 | சங்கானை | -0777726322 |

கொழும்பு (வெள்ளவத்தை) - 0777469777

வெளிமாவட்டங்கள்- 0768226236

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## உண்மையைக் காண பின்னடிப்பு

'தூங்குபவனை எழுப்பலாம். தூங்குபவன் போல நடிப்பவனை எழுப்ப முடியாது' என்பார்கள்.

வலிந்து காணாமலாக்கப்பட்ட நமது உறவுகளின் விடயத்தில் தென்னிலங்கைச் சிங்களத் தலைவர்கள் எல்லோரும் அப்படித் தூங்குபவர்கள் போலதான் நடிக்கின்றார்கள். அதனால் அந்த நடிப்பிலிருந்து அவர்களை நிஜத்திற்கு கொண்டு வருவது சாத்தியப்படுவதில்லை.

காணாமலாக்கப்பட்ட நமது உறவுகளின் விடயம் என்றதும் தாமாகவே தேனொழுகப் பேசத் தொடங்கி விடுவர். ஆனால் கண் திறந்து பார்த்து, நீதி செய்ய முன் வரவே மாட்டார்கள்.

இலங்கையின் நீதி அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி விஜயதாஸ ராஜபக்ஷவும் இதற்கு விதிவிலக்கானவர் அல்லர்.

காணாமலாக்கப்பட்டோர் எவரும் இன்னமும் உயிருடன் இருப்பார்கள் என்பதற்கு சாத்தியம் மிகவும் குறைவு என அவர் கூறுகிறார். இதனால்தான் காணாமல் போனவர்களின் குடும்பங்களுக்கு இழப்பீட்டு தொகையாக இரண்டு லட்சம் ரூபாவை வழங்க அரசு தீர்மானித்துள்ளது என்றார் அவர்.

"காணாமலாக்கப்பட்டோரின் குடும்பங்களின் துயரங்களை – உணர்வுகளை – நாம் புரிந்து கொள்கிறோம். அவர்களை நாம் மதிக்கின்றோம்.

"உறவுகளை தொலைத்த துயரத்தில், அவர்கள் மீண்டும் வருவார்கள் என்ற ஏக்கத்துடன் வாழும் குடும்பங்கள் நீதி கேட்டு அரசுக்கு எதிராக போராடுவதில் நியாயம் இருக்கின்றது.

"காணாமலாக்கப்பட்டோர் இன்னமும் உயிருடன் இருப்பார்கள் என்பதற்கு சாத்தியம் மிகவும் குறைவு இதை அவர்களில் குடும்பத்தினரிடம் கூறினால் அவர்கள் அதனை ஏற்கத் தயாரில்லை. நாம் என்ன செய்வது?

"இவற்றையெல்லாம் கருத்திற்கொண்டு தான் காணாமலாக்கப்பட்டோரின் குடும்பங்களுக்கு இழப்பீட்டு தொகையாக இரண்டு லட்சம் ரூபாவை வழங்க அரசு தீர்மானித்துள்ளது" – என்றும் அவர் கூறுகிறார்.

இதெல்லாம் சரி. நாமும் கேட்கிறோம். ஆனால் அப்படி வலிந்து காணாமலாக்கப்பட்டுள்ளோருக்கு என்ன நடந்தது? ஏன் அல்லது எப்படி அவர்கள் உயிருடன் இல்லாமல்போகும் நிலைமை ஏற்பட்டது? அதற்கு யார் காரணம்?

வலிந்து காணாமலாக்கப்பட்டோருக்காக இரங்கிப் பேசும் நீதி அமைச்சரும், அவரின் அரசும், ஏன், எப்படி, யாரால் என்ற கேள்விகளுக்கு விடை காணும் உண்மையான நீதி, நியாயமான விசாரணைக்கு ஏன் இணங்குகிறார்கள் இல்லை?

அங்குதான், இந்தப் பேரினவாத ஆட்சி பீடத்தின் உண்மை நோக்கம் – நிஜமான கோர முகம் – ஒளிந்து கிடக்கின்றது.

# எரிபொருள்களின் விலைகள் இந்தவாரம் திருத்தப்படமாட்டா!

### அமைச்சர் காஞ்சன தெரிவிப்பு



எரிபொருள் விலையில் இந்த வாரம் திருத்தம் மேற்கொள்ளப்படாது என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

விலை குறைப்பை எதிர்பார்த்து விநியோகஸ்தர்கள் எரிபொருளுக்கான முன்பதிவுகளை வழங்காததால், எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் இருப்பு இல்லாத நிலை ஏற்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மற்றும் லங்கா ஐஓசி ஆகியன தேசிய எரிபொருள் அனுமதிச்சீட்டு மூலம் உத்தரவாதம் அளிக்கப்பட்ட தேவைகளை பூர்த்தி செய்வதற்கு போதுமான அளவு இருப்புக்களை வைத்திருக்கின்றன என அவர் தெரிவித்தார்.

எனவே, விநியோகஸ்தர்கள் தங்கள் தேவைகளுக்கு முன்பதிவுகளை செய்யுமாறு அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

# பெரசிட்டமோல் மருந்துக்குக்கூட நாட்டில் கடுமையான தட்டுப்பாடு!

### அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் வருத்தம்

நாட்டில் உள்ள சில வைத்தியசாலைகளில் பெரசிட்டமோல் மருந்துக்குக் கூட கடுமையான தட்டுப்பாடு நிலவுவதாக அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுடனான சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே சங்கத்தின் செயலாளர் வைத்தியர் ஹரித அளுத்கே இவ்வாறு தெரிவித்தார்.

பொதுவாக இந்நாட்டில் நோயாளிகளின் சிகிச்சைக்காக 1,300 இற்கும் மேற்பட்ட வகையான மருந்துகள் பயன்படுத்தப்படுகின்றன என்றும் அவற்றில் 383 வகையான மருந்துகள் அத்தியாவசிய மருந்துகளாகக் கருதப்படுகின்றன என்றும் அவர் குறிப்பிட்டார்.

எனினும் நாட்டில் தற்போது சுமார் 160 வகையான மருந்துகளுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# சுற்றுலா விசா மூலம் தொழிலுக்காக வெளிநாடுகளுக்கு செல்லவேண்டாம்

### மக்களுக்கு எச்சரிக்கை

கொழும்பு, நவ.05

சுற்றுலா விசா மூலம் தொழிலுக்காக வெளிநாடுகளுக்குச் செல்ல வேண்டாம் என இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் அறிவித்துள்ளது.

ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் ஓமான் ஆகிய நாடுகளுக்கு சுற்றுலா விசா மூலம் சென்றவர்களில் சிலர் தொழிலின்றி நிர்க்கதிக்குள்ளாகியுள்ளனர் என அந்தப் பணியகத்தின பிரதிப் பொது முகாமையாளர் காமினி செனரத் யாப்பா தெரிவித்தார்.

எனவே, சுற்றுலா விசா மூலம் தொழிலுக்காக வெளிநாடுகளுக்குச் செல்வதற்கு எதிர்பார்த்துள்ள நபர்களை பதிவு செய்யும் நடவடிக்கை தற்போது நிறுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# பாணின் விலையை குறைக்க மாட்டோம்!

### யாழ்.வெதுப்பக உரிமையாளர்கள் அறிவிப்பு



யாழ்ப்பாணத்தில் பாணின் விலையை குறைக்க மாட்டோம் என யாழ்.மாவட்ட வெதுப்பக உரிமையாளர் சங்கம் அறிவித்துள்ளது.

கடந்த காலங்களில் நாட்டின் ஏனைய பகுதிகளில் ஒரு இறாத்தல் பாண் 220 ரூபா தொடக்கம் 250 ரூபா வரையில் விற்பனை செய்யப்பட்டது.

அதன் போது நாம் இலாப நோக்கம் அற்று 200 ரூபாவுக்கே பாணை விற்பனை செய்து வந்தோம்.

தற்போது பாணை 200 ரூபாவுக்கும் அதிகமான விலையில் விற்றவர்களே 10 ரூபா விலை குறைப்பு செய்துள்ளார்கள்.

அதனால் நாம் 200 ரூபாவில் இருந்து 10 ரூபா விலை குறைப்பு செய்ய முடியாது. கோதுமை மாவின் விலை மேலும் குறைவடைந்தால் மாத்திரமே நாம் பாணின் விலையைக் குறைப்போம் என தெரிவித்தனர்.

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை - 2022



"ஒரு மனிதன் தனக்காக இல்லாவிட்டாலும் தனது எதிர்கால சந்ததியினருக்காக மரங்களை நாட்டவேண்டும்."
- அலெக்சான்டர் சிமித் -
(ஸ்கொட்லாந்துக் கவிஞர்)

# மரண அறிவித்தல்



மலர்வு
19 • 05 • 1947

உதிர்வு
30 • 10 • 2022

## திரு.தாமோதரம் பிள்ளைலோகேஸ்வரன் (வீரமலை)

### (முகாமையாளர் ஹோம்நீட்ஸ் கொள்ளுப்பிட்டி)

யாழ். புங்குடுதீவு 10ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், புங்குடுதீவு 3ம் வட்டாரம், 201 காலி வீதி கொள்ளுப்பிட்டி, கொழும்பு வெள்ளவத்தை டபுள்யூ. ஏ. சில்வா மாவத்தை ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட தாமோதரம்பிள்ளை லோகேஸ்வரன் அவர்கள் 30.10.2022 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார். அன்னார், காலஞ்சென்ற இளையதம்பி தாமோதரம்பிள்ளை பராசக்தி தம்பதிகளின் தவப்புதல்வனும், முத்துக்குமாரு செல்லத்துரை சிவக்கொழுந்து (சின்னக்குட்டி) தம்பதிகளின் அன்பு மருமகனும், கமலாம்பாள் (மாலா) அவர்களின் அன்புக் கணவரும், சிவப்பிரியா (பிரியா - சுவிஸ்), சிவதர்சினி (பபா - லண்டன்), சிவப்பிரகாஷ் (பிரகாஷ் - லண்டன்), சிவஹரிஷன் (ஹரிஷன் - லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், விக்கினேஸ்வரன் (பொபி), றொஷான் ஜெபநேசன், அனுஷானந்தி, அனுஷா ஆகியோரின் அருமை. மாமனாரும், நடேசன் சறோதினிதேவி, சிவலிங்கம் புண்ணியலட்சுமி, குணபாலன் புவனேஸ்வரி (புவனம்) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் சி.க.லக்ஷ்மணனின் பாசமிகு தம்பியும், காலஞ்சென்ற ஆறுமுகம், நடேசன், சிவலிங்கம் மற்றும் குணபாலன் ஆகியோரின் பாசமிகு. மைத்துனரும், ஆறுமுகம் மகேஸ்வரி அவர்களின் சகலனும், ஆதீஷன், அக்ரகா, அக்ரனா, அனோசரா, ஆர்த்திக், அனன்யா, ஜஸ்வர்யா, கஷ்மிகா, அஷ்விகா ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார். அன்னாரின் பூதவுடல் 06-11-2022 ஞாயிற்றுக்கிழமை அன்று மு .ப 09.00 மணி முதல் பி. ப 05:00 மணிவரை பொரளை ஜயரத்ன மலர்ச்சாலையில் பார்வைக்காக வைக்கப்படும். இறுதிக்கிரியைகள் பொரளை ஜயரத்ன மலர்ச்சாலையில் 07.1.2022 திங்கட்கிழமை அன்று. மு.ப 09:00 மணிமுதல் பி.ப 01.00 மணி வரை நடைபெற்று பி. ப 02.00 மணிக்கு. ஜெயவர்த்தனபுர கனத்தை இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும், இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: குடும்பத்தினர்

'கம்பவாரிதி' இலங்கை ஜெயராஜ் தமது 'உகரம்' இணையத்தளத்தில் 'பாட்டும் நானே! பாவமும் நானே!' என்ற தலைப்பில் வாராந்தம் வரையும் கேள்வி - பதில் பகுதி 'காலைக்கதிர்' நாளிதழில் ஒவ்வொரு வாரமும் வெளியாகி வாசகர்களின் அறிவுக்குத் தீனியாகிறது.

# பாட்டும் நானே? பாவமும் நானே!




**1. கேள்வி:-** நாடாளுமன்றத்தில் நடந்த அரசமைப்பின் 22 ஆம் திருத்தச் சட்டமூலத்தின் வாக்களிப்பின் போது, சுமந்திரன் அப்பிரேரணையை எதிர்த்து வாக்களிக்காமல் வெளியேறியமையையும், கூட்டமைப்பின் மற்றைய சில உறுப்பினர்கள் அதனை ஆதரித்து வாக்களித்தமையையும் பார்த்தீர்களா? மீண்டும் சுமந்திரன் எதிர்ப்பலை ஒன்று தொடங்கியிருக்குமாப் போல் தெரிகிறதே. இவை பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

**பதில்:-** எங்கள் தலைவர்களுக்கு வெட்கம், மானம், ரோம் என்பவையெல்லாம் போயே போய்விட்டன. எத்தனை தரம்தான் இவர்களைத் திட்டித் தீர்ப்பது என்று தெரியவில்லை. இந்த மண்ணுக்காகத் தியாகம் செய்த இளைஞர்களின் இரத்தத்தாலும், உயிராலும் உருவாக்கப்பட்ட பதவிகளின் மேல்த்தான் தாம் இருக்கிறோம் என்பதை மறந்து, இனம் பற்றிய எந்தவித அக்கறையும் இல்லாமல், கூத்தாடிக் கொண்டிருக்கிறார்கள் இவர்கள்.

நாடும், இனமும், மக்களும் இப்போது இவர்களுக்கு இரண்டாம் பட்சமாகி விட்டன. பதவியும், ஆணவமும் தான் இவர்களுக்கு இப்போது முக்கியமாகி விட்டது. அவற்றிற்காக எதையும் விற்க அவர்கள் தயாராகி விட்டார்கள் போலத் தெரிகிறது. இனத்தின் கழுத்தில் கயிறு சுற்றி, கட்சி பிரிந்து நின்று, கயிறிழுத்து விளையாடுகிறார்கள் இவர்கள். இவர்களின் இழுப்பால் தொண்டையிறுகி இனம் மூச்சுத் திணறுகிறது. அந்தப் பரிதாபம் இவர்களின் கண்களில் படுவதாய்த் தெரியவில்லை.



தேசத்தைப் பணயம் வைத்துச் சூதாடிய பாண்டவர்களைப் போலத்தான் இவர்கள் செயற்படுகிறார்கள். அதனால் பாண்டவர்கள் போலவே, இவர்களும் விரைவில் நாடிழந்து காடு செல்லப் போகிறார்கள். தங்களின் சொந்த விருப்பு, வெறுப்புகளுக்காக இனத்தை விற்கும் உரிமையை இவர்களுக்கு யார் வழங்கினார்கள் என்று தெரியவில்லை. தமிழ்மக்கள் தம் வாக்குகளால் இவர்களுக்கு வழங்கிய தலைமைப் பதவி, இனத்தைக் காவல் செய்வதற்காகவேயன்றி இனத்தை விற்பதற்காக அல்ல என்பதை யாராவது இவர்களுக்கு அடித்துச் சொல்லமாட்டார்களா?

தேசத்தைச் சூதில் வைத்திழந்த தர்மனைப் பற்றிச் சொல்லும் பாரதி, கோயில் பூசை செய்வோன் சிலையைக் கொண்டு விற்றல் போலும், வாயில் காவல் செய்வோன் வீட்டை வைத்து இழத்தல் போலும் எனும் உவமைகளால் அவன் செயலைக் கண்டித்துரைப்பார். இன்று நம் தலைவர்களும் இதனைத்தான் செய்து கொண்டிருக்கிறார்கள்.

இத்தனையும் என் சொந்த நெஞ்சக் குமுறல்கள். இனி விடயத்திற்கு வருகிறேன். குறித்த அரசமைப்புத் திருத்தம் பற்றிய 22 ஆம் பிரேரணையின் வாக்களிப்பில், உறுப்பினர்கள் எப்படி வாக்களித்தல் வேண்டும் என்பது பற்றி ஆராய, கூட்டம் ஒன்றினைக் கூட்டும்படி சுமந்திரன் அறிவித்த செய்தி தெளிவாய்ப் பதிவாகியிருக்கிறதாய்ச் சொல்கிறார்கள். அந்தக் காரியத்தைச் செய்திருக்க வேண்டியவர் கட்சியின் 'கொரடா'வான சாள்ஸ்நிமலநாதன்தானாம். அவர், அந்தக்கூட்டத்தைக் கூட்டத் தவறியிருக்கிறார். நாடாளுமன்றத்தில் பிரேரணை விவாதத்திற்கு வந்தபோது சுமந்திரனும், சிறீதரனும் அதனை எதிர்த்து முதலில் கருத்துரைத்திருக்கிறார்கள்.

அதன் பின்னர்தான் வாக்களிப்புப் பற்றி இவர்கள் கூடி ஆராய்ந்தார்களாம். கூட்டமைப்பின் மாற்றணியினர் பிரேரணையை ஆதரிக்க வேண்டும் எனக் கருத்துரைக்க, அவ் ஆராய்ச்சி முடிவுபெறாமல் நீண்டு முடிந்திருக்கிறது. பின் சிறீதரனும் மற்றவர்களுடன் இணைந்துதான் இப் பிரேரணைக்கு ஆதரவளிக்கப் போவதாக கடைசி நேரத்தில் சொல்லியிருக்கிறார். 'எதிர்த்துப் பேசிய நான் ஆதரித்து வாக்களிக்க முடியாது' என்று சொல்லி வெளியேறியிருக்கிறார் சுமந்திரன். இதுதான் நடந்தது என்கிறார்கள்.

இனத்தின் எதிர்காலம் பற்றிய முக்கியமான பிரச்சினைகளில்கூட, கூடி ஆராயத் தவறுவதும், ஒருவருக்கொருவர் 'ரோம்' பாராட்டிப் பிரிந்து நின்று கூத்தாடுவதும் எப்பேர்ப்பட்ட குற்றங்கள் என்று இவர்களுக்குத் தெரியவில்லை. கூட்டமைப்புக்குள் இன்று மக்கள் செல்வாக்குப் பெற்றுத் திகழும் தலைவர்களில் ஒருவரான சிறீதரன் கூட, 'டான்' ரி.வி பேட்டியின் போது, சுமந்திரன் மீதான கோபத்தால், அவருக்குத் தமது எதிர்ப்பைக் காட்டவே, பிரேரணையை ஆதரித்து உறுப்பினர்கள் வாக்களித்தார்கள் என்கிறார். அப்போது பேட்டியாளர், 'அப்படியானால் சுமந்திரன் பிரேரணையை ஆதரித்திருந்தால் மற்றவர்கள் அதனை எதிர்த்திருப்பார்களா?' என்று கேட்க, சிரித்துக் கொண்டே 'ஆம்' என்கிறார் அவர். எத்துணை பொறுப்பில்லாத ஒப்புதல் வாக்குமூலம் இது! ஒரு தனி மனிதனுக்காக இனத்தின் நன்மையையே இவர்கள் நாசமாக்கத் துணிகிறார்கள். வெட்கக்கேடு! எதிரிகள் கைகொட்டிச் சிரிக்கப் போகிறார்கள்.

மீளவும் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். தமிழ் மக்களுக்கு இப்போது இருக்கும்?பிரச்சினை சுமந்திரனா? சிறீதரனா? அல்லது வேறொருவரா? என்பது அல்ல. இனம் தலைதூக்க என்ன செய்யவேண்டும் என்பதுவே முக்கிய விடயம். எந்தப் 'பேயாவது' எந்தப் பதவியிலாவது இருந்துவிட்டுப் போகட்டும். அந்தப் பேய், இனம் உயர வழி செய்தால் அது ஒன்றே போதுமானது.

கூட்டமைப்பிற்குள் தலைமைக் குழப்பம் விஸ்வரூபம் எடுத்துவிட்டது. சம்பந்தர் உயிரோடு பதவியில் 'தொங்கிக்' கொண்டிருக்கும் போதே, அவரது மறைவை அடிப்படையாக வைத்துத் தலைமைப் பதவியை விலைபேசப் புறப்பட்டிருப்பது அநாகரிகத்தின் உச்சம்! தலைமைப் பதவியைத் தகுதியின் அடிப்படையில் நிச்சயிக்கவேண்டுமேயன்றி, ஆளுக்காள் 'குழிபறித்து' அதனை அடைய முற்படக்கூடாது. இது தொடர்ந்தால், அடுத்த முறை தேர்தலின் போது வடகிழக்கில் பேரினவாதக் கட்சிகள் இன்னும் பல 'சீற்றுகளை'ப் பிடிக்கப் போவது நிச்சயம்.

இக்கட்சிக்குப் புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் பலதான், நிதியுதவி புரிந்து பின்னிருந்து நெறிப்படுத்துவதாய்ச் சொல்கிறார்கள். அது உண்மையானால் இங்கு நடக்கும் இத்தகைய கூத்துக்களைப் பார்த்த பின்பும் அவர்கள் எல்லாம் என்னதான் செய்து கொண்டு இருக்கிறார்களோ தெரியவில்லை? நாசம் வந்து உற்றபோது நன்மையும் தீமையாகும் போலத்தான் தெரிகிறது.

**உலகநாதரின் ஒப்பீனியன் * இதைப் படித்த பின்பும், தமிழ்த் தலைவர்கள் நாக்கைப் பிடுங்கிக் கொண்டு சாகாமல் எப்படித்தான் இருக்;கிறார்களோ? 'நறநறநற' (உலகநாதர் பல்லைக் கடிக்கிறார்.)**

**2. கேள்வி:-** வடக்கு மாகாணப் பண்பாட்டுத் திணைக்களத்தினால் நடத்தப்பட்ட 'இளங்கலை' விருது வழங்கலின் போது சிறுகதை மற்றும் கவிதை வடிவங்களைக் கலை வடிவங்களாக ஏற்றுக் கொண்டவர்கள், பேச்சினை மட்டும் ஓர் கலைவடிவமாக ஏற்றுக் கொள்ள முடியாது எனத் தீர்மானித்து விட்டார்களாம். இது பற்றி ஒரு பேச்சாளனாய் என்ன சொல்ல விரும்புகிறீர்கள்?

**பதில்:-** என்னத்தைச் சொல்ல? அம் முடிவை எடுத்த நம்முடைய தமிழறிஞர்களுக்கு 'ஸ்பைனல் கோட்டில்' ஏதோ பிழை இருக்கிறது. அவர்களுக்கு அந்தப் பிழை நீண்ட நாள்களாகவே இருப்பதாய்த் தெரிகிறது. அந்தக் காலத்தில் வீதியோரத்து மரங்களின் கீழ் இருந்து கொண்டு, சில கிராமிய வியாபாரிகள் மலைப்பாம்பு எண்ணெய் என்ற ஒன்றைக் குப்பிகளில் கொண்டு வந்து, அது முதுகெலும்பைப் பலப்படுத்த உதவும் என்று, கூவிக்கூவி விற்பார்கள். இப்போது அந்த எண்ணெய் எங்கு கிடைக்கும் என்று தெரிந்தால், அதில் சில குப்பிகளை வாங்கி நம் தமிழறிஞர்களுக்குக் கொடுத்து அவர்களின் முதுகெலும்புகளுக்குத் தடவச் சொல்லலாம்.

சிங்களப் பகுதியில் இருந்து வந்த, விருதுக்கான சுற்று நிருபத்தை, கண்ணை மூடிக்கொண்டு விழுங்கி, இந்த முடிவை நம் தமிழறிஞர்கள் எடுத்திருப்பது துரதிஷ்டமே. முன்பொருமுறை நான் சொன்ன, 'பாவம் தமிழ்' என்ற தொடரைத்தான் மீண்டும் சொல்ல வேண்டியிருக்கிறது. இவர்கள் என்றுதான் முதுகை நிமிர்த்தி சொந்தமாய்ச் சிந்திக்கப் போகிறார்களோ தெரியவில்லை.

நம்முடைய தமிழில் அறுபத்து நான்கு கலைகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. 'ஆயகலைகள் அறுபத்து நான்கு' என நம் கம்பரின் பாடல் கூறுகிறது. அந்த அறுபத்து நான்குக் கலைகளில், 'மதுரபாடனம்' என்ற ஓர் கலையும் பதிவாகியிருக்கிறது. மதுரபாடனம் என்ற அச்சொல்லுக்கான பொருள் 'இனிது மொழிதல்' என்பதுவேயாம். எனவே பேச்சும் ஓர் கலையாய்த் தமிழில்



அங்கீகரிக்கப்பட்டிருப்பதை இவர்கள் சிங்களத்தார்க்குச் சொல்லியிருக்கவேண்டும்.

இது தவிர, காலத்தால் அழியாத அறநூல் செய்த நம் திருவள்ளுவர், சமூகத்தொடர்பைப் பேணவேண்டிய இல்லறத்தார்க்குப் பேச்சுக் கலையை 'இன்சொல்' ஆகவும், தர்மத்தைப் பேணவேண்டிய துறவிகளுக்குப் பேச்சுக் கலையை 'வாய்மை'யாகவும், காரியசித்தி பெற வேண்டிய பொருளியலாளர்களுக்குப் பேச்சுக் கலையை 'சொல்வன்மை'யாகவும், பொய்மையால் இன்புறும் காதலர்க்குப் பேச்சுக்கலையை 'நலன் புனைந்துரைத்தல்' ஆகவும் அமைத்து, பேச்சுக்கலைக்குக் கொடுத்த முக்கியத்துவம் கவனிக்கத்தக்கது.

அதைவிட நம்இராமாயணக் காப்பியத்தில் பேச்சுக் கலையில் சிறந்;து நின்ற அனுமனுக்கும் இராமனுக்கும் 'சொல்லின் செல்வன்', 'செல்லும் சொல்வலான்' போன்ற பல விருதுகளைக் கவிச்சக்கரவர்த்தி கம்பரே வழங்கியுள்ளமையையும், இவர்கள் கவனித்திருக்க வேண்டும்.

(09ஆம் பக்கம் பார்க்க)

# கொழும்பிலும் புறநகர்ப் பகுதிகளிலும் டெங்கு உச்ச மட்டத்தை எட்டுமாம்!

## வைத்தியர் ருவன் விஜயமுன எச்சரிக்கை



கொழும்பிலும் புறநகர்ப் பகுதிகளிலும் டெங்கு உச்ச மட்டத்தை எட்டும் என வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த மாதத்தின் பிற்பகுதியிலும் டிசெம்பர் மாதத்திலும் அடுத்த வருடம் ஜனவரி மாதத்திலும் டெங்கு உச்சக் கட்டத்தை எட்டும் என பிரதம வைத்திய அதிகாரி வைத்தியர் ருவன் விஜயமுனி ஆங்கில ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

தெஹிவளை, கல்கிசை, கோட்டை மற்றும் கொலன்னாவ போன்ற பகுதிகளில் தற்போது டெங்கு நோயாளர்கள் அதிகம் பதிவாகியுள்ளனர் எனவும் அவர் கூறியுள்ளார்.

சுகாதார அமைச்சின் புள்ளிவிவரங்களின்படி, இந்த ஆண்டு ஒக்ரோபர் மாதத்தில் 586 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். மேலும் நாடு முழுவதும் இதுவரை 49 ஆயிரம் டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

# இலங்கையில் பெண்களும் குழந்தைகளுமே பொருளாதார நெருக்கடியால் அதிகம் பாதிப்பு!

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியால் பெண்களும் குழந்தைகளுமே அதிகம் பாதிக்கப்படுகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த விடயம் தொடர்பாக ஐக்கிய நாடுகளின் ஆசியா மற்றும் பசுபிக் பொருளாதார சமூக ஆணையத்தின் தெற்கு மற்றும் தென்மேற்கு ஆசிய அலுவலகத்தின் தலைவர் மிகிகோ தனகா தெரிவித்துள்ளார்.

பெருந்தோட்ட மற்றும் கைத்தொழில் அமைச்சர் கலாநிதி ரமேஷ் பத்திரனவுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சிறிய அளவிலான பெண் தொழில்முனைவோரை ஊக்குவிப்பதன் மூலம் குடும்பச் சூழலில் பெண்கள் மற்றும் குழந்தைகளைப் பாதுகாப்பதற்கு அதிக வாய்ப்புகள் இருக்கின்றன எனக் கூறிய அவர், தேவையான ஆதரவை வழங்குவதாகவும் கூறியுள்ளார்.



# ரயில் நேர அட்டவணைகளை திருத்துவதற்கு நடவடிக்கை!

அனைத்து ரயில் மார்க்கங்களினதும் நேர அட்டவணையை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சியாகப் பதிவாகும் ரயில் தாமதத்தை கருத்திற்கொண்டு இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக ரயில்வே பொது முகாமையாளர் டி.எஸ்.குணசிங்க தெரிவித்தார்.

உத்தேச திருத்தத்திற்கு அமைய, ஒவ்வொரு ரயில் சேவை நேரத்திலும் 15 அல்லது 20 நிமிட மாற்றம் ஏற்படலாம் என அவர் கூறினார்.

இந்த திருத்தங்கள் விரைவில் அறிவிக்கப்படும் என ரயில்வே பொது முகாமையாளர் மேலும் தெரிவித்தார். இதற்கு முன்னர் கரையோர ரயில் மார்க்க நேர அட்டவணை திருத்தப்பட்டது.

# திலினி பிரியமாலியை நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறு உத்தரவு


திலினி பிரியமாலியை எதிர்வரும் 24 ஆம் திகதி சிறைச்சாலைகள் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்துமாறு கொழும்பு மேலதிக மாவட்ட நீதிவான் சந்தன ஏக்கநாயக்க உத்தரவிட்டுள்ளார்.

கையடக்கத் தொலைபேசிகளை தம்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டின் விசாரணைக்காக அவர் மீண்டும் ஆஜர்படுத்தப்பட்டபோது நீதிவான் மேற்கண்டவாறு கூறினார்.

நிதி மோசடி குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட திலினி பிரியமாலி நீதிமன்ற உத்தரவில் தொடர்ச்சியாக விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.







# கிளிநொச்சியில்
# ஐஸ்வர்யம்
# பெருவிருந்து மண்டபம்
# Ishwaryam Banquet Hall



Tel:- 021 228 3701, 071 7354308

Whatsapp:- 071 7736 4308

No.315, Kandy Road,
Kilinochchi



- அன்பான வரவேற்பு
- தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
- இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
- இந்தியன் உணவுவகைகள்
- Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.

சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்

# ISHWARYAM BANQUET HALL
## BANQUET MEALS HALL





**FULL OPTION**

### MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style

### DESSERT
| | |
|---|---|
| ice Cream Cup | - 60/= |
| Fruit Salad | - 60/= |
| I ce Cream & Fruit Salad | - 100/= |
| Cream Caramel | - 120/= |

**SPECIAL MENU PACKAGE**

### BEVERAGES
| | |
|---|---|
| jUICE 200 ml | - 70/= |
| Milk Drink | - 70/= |
| Cocacola M | - 70/= |
| Pepsi M | - 70/= |
| Swchpees Tin | - 250/= |
| Coca Cola Tin | - 250/= |

# பாட்டும் நானே? ...

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதுமட்டுமல்லாமல், 'யூலியசீஸர்' அவரது தோழர் களால் கொலை செய்யப்பட்ட பின்பு, அவரது மரண வீட்டின் போது மார்க்அன்டனி என்கின்ற சீஸரின் நண்பன், தான் செய்த அஞ்சலி உரையின் மூலம் நாட்டு மக்களிடம் புரட்சியைக் கிளப்பிய கதை, மேற்குநாடுகளிலும் பேச்சுக்கலையின் நுட்பத்தை வெளிப்படுத்தும் செய்தி யாய்ப் பதிவாகியிருக்கிறது.

கலை என்பது கற்பனைத்திறன் மிக்கதாய் இருக்க வேண்டும் என்று உரைப் பார்களானால், அத் தகுதி பேச்சுக்கலைக்குத் தான் மற்றைய கலைகளை விட அதி கமாக இருக்கிறது என்று சொல்லலாம். ஓரிரண்டு மணிநேரம் கவிதை பாடியோ, சிறுகதை சொல்லியோ ஓர் சபையை அடக்கி வைத்திருக்க முடியாது என்பது வெளிப் படை! ஆனால், தனி ஒரு பேச்சாளன் தனது கற்பனை நிறைந்த சொற்திறத்தால், மணித்தியாலக்கணக்கில் சபைகளை அடக்கி வைத்திருத்தலை வெளிப்படக் காண் கிறோம். அப்படியிருக்கப் பேச்சைக் கலையாகக் கொள்ள முடியாது எனும் வாதத்தை எப்படி ஏற்பது?

நிறைவாக, சொல்வன்மை எனும் அதிகாரத்தில் வள்ளுவக் கடவுளார் சொன்ன மூன்று குறள்களை, பேச்சை ஓர் கலையாக ஏற்றுக் கொள்ள மறுக்கும் நம் தமிழ் அறிஞர்களுக்கு நினைவூட்ட விரும்புகிறேன்.

'நா நலம் என்னும் நலமுடைமை அந்நலம் யா நலத்துள்ளதூஉம் அன்று' (எல் லாத் திறமைகளிலும் நா நலமே உயர்ந்ததாம் என்பது), 'கேட்பார் பிணிக்கும் தகை யவாய்க் கேளாரும் வேட்ப மொழிவதாம் சொல்' (கேட்க விரும்புகிறவர்களைப் பிணித்தும், விரும்பாதவர்களைக் கேட்க வைத்தும் பேசுவதே பேச்சுக்கலையாம்), 'பல சொல்லக் காமுறுவர் மன்ற மாசற்ற சில சொல்லல் தேற்றாதவர்' (பேச்சுக்கலையை அறியாதவர் சுருங்கச் சொல்ல அறியாமல் விரித்துப் பேச விரும்புவார்கள்.)

இக்குறள்களைப் படித்தபின்;பும் பேச்சை ஓர் கலையாக ஏற்க மறுப்பார்களேயா னால், பெரியபுராணத்தில் விறன்மிண்டர் எனும் அடியார் சுந்தரரை இவர் சைவத் திற்குப் புறகு என்று சொல்லி, தள்ளி வைத்தாற்போல, இவர்களையும் தமிழுக்குப் புறகு என்று சொல்லி தள்ளி வைப்பதைத் தவிர வேறு வழியில்லை.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ நம் தலைவர்கள்தான் அப்படி என்றால் அறிஞர் களுமா?**

**3. கேள்வி:-** எம்.எஸ்.விஸ்வநாதன், இளையராஜா, ஏ.ஆர்;. ரகுமான் ஆகியோரின் இசைத்திறனை ஒப்பிடுங்கள் பார்க்கலாம்?

**பதில்:-** எம்.எஸ். விஸ்வநாதன் இசை - மணக்க மணக்க அம்மா சமைத்து இலையில் போடும் சாப்பாடு.

இளையராஜா இசை - ஹோட்டலில் சில மெருகூட்டல்களோடு உண்ணும் முதல் சொன்ன அதே உணவு.

ஏ. ஆர்.ரகுமான் இசை - நம் இனச்சாயல் இல்லாத, அளவுக்கதிகமாக ஆர்வத் தைத் தூண்டுகின்ற 'பீட்ஸ்சா'

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ வாரிதியார் வர வர சினிமாக்காரர்களோடும் வம்பிழுக்கிறார்..!**

4. கேள்வி:- பாகிஸ்தானில் மீண்டும் ஒரு முன்னாள் பிரதமரைச் சுட்டிருக்கிறார்களே!

பதில்:- அவர்களுக்குத் தலைவர்களைச் சுடுவது என்பது தோசை சுடுவது மாதிரி. கிரிக்கட் வீரர் அவுட்டாகாமல் தப்பியது பெரிய வியம்;.

**உலகநாதரின் ஒப்பீனியன் ⁎ மெய்தானுங்கோ!**

# வவுனியாவில் கால்நடைகளால் போக்குவரத்துக்கு இடையூறு!





வவுனியா நகரசபை மற்றும் பிரதேச சபைக்குட்பட்ட வீதிகளில் கட்டாக்காலி மாடுகளால் மக்கள் போக்குவரத்து மேற் கொள்வதில் பெரும் சிரமத்தை எதிர் கொள்ள வேண்டியுள்ளது.

மழை ஆரம்பித்துள்ள நிலையில் நெளுக்குளம், பட்டாணிச்சூர், வேப்பங் குளம், குளுமாட்டுச்சந்தி, பூந்தோட்டம் மற்றும் வவுனியா நகர் போன்ற பல்வேறு பகுதிகளில் இரவு மற்றும் காலை வேளை களில் கட்டாக்காலி மாடுகள் நடு வீதிகளில் படுத்துறங்குவதால் போக்குவரத்து செய் வோர் அசௌகரியங்களை எதிர்நோக்கி யுள்ளனர்.

இதன் காரணமாக விபத்துகள் ஏற் பட்டு கடந்த காலங்களில் பலர் வைத்தி யசாலையில் சேர்க்கப்பட்டிருந்தனர்.

எனவே கட்டாக்காலி மாடுகளைப் பிடித்து போக்குவரத்துக்களை இடை யூறுகள் இன்றி மேற்கொள்வதற்கு உதவி செய்யுமாறு பொதுமக்கள் தெரிவித்துள் ளனர்.

# இலங்கை காப்போம் தொண்டு நிறுவனத்தால் யாழ். பல்கலை இரு மாணவருக்கு நிதியுதவி!

தந்தையிழந்து மிகவும் வறுமைக் கோட்டின்கீழ் கல்விகற்று யாழ். பல்கலைக் கழக கலைப்பிரிவுக்கு தெரிவு செய்யப்பட்ட முள்ளிவாய்கால் – உடையார்கட்டு பிரதே சத்தைச் இரு மாணவிகளின் உயர்படிப்பை கஷ்டமின்றி தொடர்வதற்கு இலங்கை காப்போம் தொண்டு நிறுவனம் நிதியுத விகளை வழங்கி வைத்துள்ளது.

இலங்கை காப்போம் தொண்டு நிறு வனத்தின் பிரதம நிறைவேற்றுப் பணிப் பாளர் கு.பிரதீப்கரன் (திலீப்) உள்ளிட்ட குழுவினர் முள்ளிவாய்கால் – உடையார் கட்டு பிரதேசத்திலுள்ள சு . சங்கவி மற்றும் த. கிந்துஜா என்ற இரு மாணவிகளின் இல்லம்தேடிச் சென்று தலா 20 ஆயிரம் ரூபா வீதம் முதற்கட்டமாக இந்த நிதியுத விகளை வழங்கி வைத்துள்ளனர்.

இதன்போது யாழ். தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் பிரதி அதிபர் கு.சுதாகரன், வடக்கு, கிழக்கு கலைப்பிரிவு மாணவர் ஒன்றியத்தின் உறுப்பினர் த. யதுர்சனன் மற்றும் காப்போம் தொண்டு நிறுவனத்தின் உறுப்பினர் உள்ளிட்ட பலர் பங்கேற்றிருந்தனர்.



# யூரியா இறக்குமதியை 2025 இல் முற்றாக நிறுத்துகின்றது இந்தியா

## உள்நாட்டு உற்பத்தியில் தன்னிறைவு காண முடிவு

2025 ஆம் ஆண்டு முதல் யூரியா இறக்குமதியை நிறுத்த இந்தியா இலக்கு நிர்ணயித்துள்ளது.புதிய ஆலைகளை இயக்குவதன் மூலம் நாடு அதன் உள்ளூர் உற்பத்தி திறனை அதிகரிக்கும் என உரத் துறை அமைச்சர் மன்சுக் மாண்டவியா புதன்கிழமை தெரிவித்தார்.

யூரியாவின் முதன்மையான இறக்குமதியாளராக உள்ள இந்தியா, அதன் சராசரியான மூன்றரைக் கோடி தொன்கள் வருடாந்திர பயிர் ஊட்டச்சத்து நுகர்வில் சுமார் 30 வீதத்தை இறக்குமதி செய்கிறது.

இறக்குமதி செய்யப்படும் யூரியாவை நம்பியிருப்பதை 2025 ஆம் ஆண்டிற்குள் முடிவுக்கு கொண்டு வருவதை நாங்கள் இலக்காகக் கொண்டுள்ளோம்.







எங்கள் ஐந்து புதிய ஆலைகள் அதற்குள் தொடங்கப்படும் என்று மன்சுக் மாண்டவியா செய்தியாளர்களிடம் கூறினார்.

உத்தரப்பிரதேசத்தின் வட மாநிலத்திலுள்ள கோரக்பூர், தெலுங்கானாவில் உள்ள ராமகுண்டம் மற்றும் கிழக்கு இந்தியாவில் உள்ள தல்ச்சர், பராவ்னி மற்றும் சிந்த்ரி ஆகிய இடங்களில் உள்ள ஆலைகள் இணைந்து ஒவ்வொரு ஆண்டும் 6.5 மில்லியன் தொன் யூரியாவை உற்பத்தி செய்யும்.

நானோ யூரியா எனப்படும் பயிர் ஊட்டச்சத்தின் நானோ துகள்கள் கொண்ட உள்நாட்டு யூரியாவின் உற்பத்தி 2025 ஆம் ஆண்டுக்குள் 5 மில்லியன் தொன்னாக உயரும் என்றும், ராமகுண்டம் ஆலையை நவம்பர் 12 இல் பிரதமர் நரேந்திர மோடி திறந்து வைக்கிறார் என்றும் அவர் கூறினார்.

இந்தியா இப்போது ஓமன், கத்தார், சவுதி அரேபியா மற்றும் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் உட்பட பல நாடுகளில் இருந்து யூரியாவை இறக்குமதி செய்கிறது.

ஆசியாவின் மூன்றாவது பெரிய பொருளாதாரத்திற்கு அதன் மிகப்பெரிய விவசாயத் துறைக்கு உணவளிக்க பயிர் ஊட்டச்சத்துக்கள் தேவைப்படுகின்றன, இது நாட்டின் தொழிலாளர்களில் 60 வீதம் மற்றும் கிட்டத்தட்ட 3 டிரில்லியன் அமெரிக்க டொலர் பொருளாதாரத்தில் 15 வீதம் ஆகும்.

உலகளாவிய விலை உயர்வால், மார்ச் 31, 2023 வரையிலான நிதியாண்டிற்கான இந்தியாவின் உர மானிய மசோதா முந்தைய ஆண்டின் 1.5 டிரில்லியன் ரூபாயிலிருந்து 2.25 டிரில்லியன் இந்திய ரூபாயாக (27.21 பில்லியன் அமெரிக்க டொலராக) உயரும் என்று மாண்டவியா கூறினார்.

இந்தியாவின் ஒட்டுமொத்த உர மானியத்தில் யூரியாவின் பங்கு 70 வீதம் ஆகும்.

விவசாயிகளுக்கு உதவுவதற்காக குறைந்த விலையில் மற்ற உரங்களை விற்பனை செய்யும் நிறுவனங்களுக்கு அரசு ஒரு குறிப்பிட்ட அளவு நிதியுதவியை வழங்குகிறது.

புதன்கிழமை, இந்த நிதியாண்டின் இரண்டாம் பாதியில்பாஸ்பேட்டிக்மற்றும்பொட்டாசிக்உரங்களுக்கு 518.75 பில்லியன் ரூபா மானியத்தின் இரண்டாவது தவணைக்கு இந்தியா ஒப்புதல் அளித்துள்ளது.

# இந்திய உற்பத்திகளின் ஏற்றுமதி இலக்குகளையும் தாண்டி உயர்வு



2022 - 23 ஏப்ரல் - செப்ரெம்பர் காலத்தில் இந்தியாவின் கோதுமை ஏற்றுமதி முந்தைய ஆண்டை விட இருமடங்காக, 1.48 பில்லியன் அமெரிக்க டொலராக அதிகரித்துள்ளது என்று இந்திய வர்த்தக அமைச்சகம் புதன்கிழமை தெரிவித்துள்ளது. கடந்த ஆண்டு இதே காலத்தில் ஏற்றுமதி 630 மில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்தது.

மே மாதத்தில் கோதுமை ஏற்றுமதியை அரசாங்கம் தடை செய்திருந்தாலும், சில ஏற்றுமதிகள் அதைக் கோரும் நாடுகளின் உணவுப் பாதுகாப்புத் தேவைகளைப் பூர்த்தி செய்ய அனுமதிக்கப்படுகின்றன.

கோதுமை ஏற்றுமதி ஏப்ரல் - செப்ரெம்பர் 2021 இல் 630 மில்லியன் அமெரிக்க டொலரிலிருந்து 2022 ஏப்ரல் - செப்ரெம்பரில் 1,487 மில்லியன் அமெரிக்க டொலராக உயர்ந்தது என்று அமைச்சகம் கூறியது.

ரஷ்யா - உக்ரைன் போர் காரணமாக உலக



கோதுமை விநியோகம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. இரு நாடுகளுமே கோதுமை உற்பத்தியில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

இந்த நிதியாண்டின் ஆறு மாத காலப்பகுதியில் விவசாய மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருள்களின் ஏற்றுமதி 25 சதவீதம் உயர்ந்துள்ளதாகவும் இந்திய வர்த்தக அமைச்சகம் தெரிவித்துள்ளது.

வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவு ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையத்தின் (APEDA) தயாரிப்புகளின் ஒட்டுமொத்த ஏற்றுமதி 2022 ஏப்ரல் - செப்ரெம்பரில் 13.77 பில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரித்துள்ளது. இது கடந்த வருடம் இதே காலப் பகுதியில் 11.05 அமெரிக்க டொலர்களாக இருந்தது.

2022 - 23 ஆம் ஆண்டில், வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவு ஏற்றுமதி மேம்பாட்டு ஆணை



யத்தினால் 23.56 பில்லியன் டொலர் ஏற்றுமதி இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.அதில் முதல் ஆறு மாத காலப்பகுதியில் 13.77 பில்லியன் டொலர் ஏற்றுமதி ஏற்கனவே எட்டப்பட்டுள்ளது.

அதேபோன்று, மதிப்பாய்வுக்கு உட்பட்ட காலப்பகுதியில் புதிய பழங்களின் ஏற்றுமதி 313 மில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரித்துள்ளது.

பருப்பு ஏற்றுமதி 135 மில்லியன் அமெரிக்க டொலர்களில் இருந்து 330 மில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரித்துள்ளது.

பாசுமதி அரிசி ஏற்றுமதியும் 2022 ஏப்ரல் - செப்ரெம்பர் காலத்தில் 2.28 பில்லியன் அமெரிக்க





டொலர்களாக அதிகரித்துள்ளது.

பாஸ்மதி அல்லாத அரிசியின் ஏற்றுமதி 8 சதவீதம் அதிகரித்து 3.20 பில்லியன் அமெரிக்க டொலர்களாக உள்ளது.

இதேபோல், கோழிப் பொருள்களின் ஏற்றுமதி 83 சதவீதம் அதிகரித்து 57 மில்லியன் டொலர்களாகவும், பால் பொருள்களின் ஏற்றுமதி 58 சதவீதம் அதிகரித்து 342 மில்லியன் டொலர்களாகவும் உள்ளது.

(மூலம்: 'த எக்கனமிக் ரைம்ஸ்')

காலைக்கதிர்
Kalaikkathir

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.



- செல்லத்துரை ரவீந்திரன் -

அங்கம் - 171

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!



கேள்வி:- கொடூரம், குரூரம், வன்முறை என்பவை சிங்கள இனத்தின் இரத்தத்தில் ஊறிய மனோ வியாதிகளா? அப்படியானவர்களுடன் எப்படி இணக்கப் பேச்சு வார்த்தைகளால் சேர்ந்து வாழ்வது?

பதில்:- இது பரந்த வியாக்கியானங்கள் கொண்ட, சமகால இயல்புகளின் ஆராய்வுகளோடு மனோதத்துவத்தையும் இணைத்த



அங்கலாய்ப்புகளில் எழுந்த கேள்வி என எண்ணுகிறேன். அவற்றை ஒட்டி நான் தரும் பதிவுகள் என்னுடைய சிறிய அறிவின் கருத்துக்களே ஒழிய, திட்டவட்டமானவையாகவோ, இறுதியானவையாகவோ கொள்ளப்படக் கூடாது.

தமிழ் மக்கள், சிங்கள மக்கள் இரு பகுதியினரது சமூகவியலையும் கவனித்தால், 1977இல் கலவரங்களில் சிங்களக் காடையர்கள் படுமோசமாக தாக்கி அழித்த போது தப்பி ஓடியவர்களில் பலர் அடுத்திருந்த சிங்கள மக்களின் வீடுகளுக்கோ, கடைகளுக்கும்தான் வேறு வழி இல்லாத அபயம் தேடி ஓடினார்கள். அந்தச் சிங்களவர் சிலர் தங்களது உயிர்களைப் பணயம் வைத்தும் கூட, தமிழர்களைக் காப்பாற்றினார்கள். சன்சோனி ஆணைக்குழுவுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களில், சிங்கள மக்கள் இப்படியான அபயங்கள் தந்தமையால் மேலும் எவ்வளவோ உயிர் அழிவுகள் தடுக்கப்பட்டன, அதற்கு தமிழ் மக்கள் நன்றி உள்ளவர்களாக இருக்கிறார்கள் எனக் கூறப்பட்டது. ஆனாலும் 1977 இல் பாதிப்புற்ற தமிழ் பகுதிகளின் பெரும்பான்மையானவர்கள் திரும்பவும் தென்பகுதிகளுக்குச் சிங்கள மக்களிடையே தான் சென்று வாழ்ந்தார்கள் – வெளிநாடு போக வசதி பெற்றவர்களை தவிர.


திரும்ப 1983இல் பாரிய கலவரத்தால் பேரழிவுகள் நடந்தன. அவர்களது சமூகவியல், 1977 இன் பின் நடந்தவைபோலவே தொடர்ந்தன. தமிழ் பகுதிகளில் சென்று குடியேறியவர்களின் விகிதாசாரங்கள் குறைவு. அதன் காரணங்களின் ஆய்வுகள் பல விளக்கங்கள் தருகின்றன.

1977 – 1983 காலங்களில் இரு இனத்தவர்களுக்கும் இடையே பல கலப்புத் திருமணங்கள் நடந்தன. இப்பொழுதும் நடக்கின்றன.

போரின் வன்முறைகளாலும் வான் தாக்குதல்களாலும் அழிவுகளும் பீதிகளும் ஏற்பட, அனேகர் கொழும்புக்குக் குடிபெயர்ந்து, சிங்கள மக்களிடையேதான் வாழ்ந்தார்கள். அவர்கள் புலம்பெயர்ந்த நகரங்களில் கூட. குடியேறியவர்கள் இடையே இனமுருகல் இருந்தாலும் தற்சமயம் இளம் தலைமுறையினர் இடையே வேற்றுமைகள் குறைந்து, தாங்கள் குடிபுகுந்த நாட்டவர்களாக அவர்களிடைய கலப்புத் திருமணங்கள் பெருமளவில் நடைபெறுகின்றன. ஆக இரண்டாம், மூன்றாம் தலைமுறை, யூதர்கள் போன்று தமிழ் மக்களது இலட்சிய போராட்டத்தை முன்னெடுத்துச் செல்வார்களா என்ற கருத்து நிலை ஐப்பாடு புலம்பெயர் மக்களிடையே உண்டு.

நடந்த உரிமைப்போர் பெரும்பான்மையைப் பாவித்து செயல்படும் அரசுகளுக்கு எதிரானதே ஒழிய, சிங்கள மக்களுக்கு எதிரானது அல்ல எனப் பிரபாகரன் உட்பட எல்லா அரசியல் தலைவர்களும் அறை கூவினாலும், சிங்கள மக்கள் பொதுவாக அவை தமிழ் மக்களால் தங்களுக்கு எதிரானவையாவே கணக்கெடுக்கிறார்கள். இந்தச் சமுதாய இயல்புகளினாலோ என்னவோ 75 வருட கால போராட்டங்கள் நடக்க, பேச்சுக்கள், இந்தியா ஒப்பந்தம், போர், முள்ளிவாய்க்கால் நடத்தப்பட்டு அவற்றால் நாடு வங்கு ரோத்து அடைந்து, பேரிடர் ஏற்படும் நிலை வந்த பின்னரும், சிங்கள அரசியல் தரப்புகள் தமிழர்களுக்கு என்ன பிரச்சினை எனக் கேட்கும் நிலைதான் இங்கு இருக்கின்றது. இணக்கங்களில் சேர்ந்து இருக்கலாமா எனக் கேட்டால், தமிழ் சினிமாப் பாணிப் பதில் போல 'இருக்கலாம் ஆனால் இருக்க முடியாது' என்ற பதிலைத்தான் சமூகவியல் தெளிவுபடுத்துகிறது. அரசியலுக்காக பேராண்மைகளைத் தவிர்த்து இனப்பிரச்சிக்கான தீர்வு ஏற்பட்டு, அதை அமல்படுத்தும் பண்பும் மனமாற்றமும் ஏற்பட்டால் சேர்ந்து வாழ்வதற்கான வாய்ப்புகள் கூடவே உண்டு.





## குரூரம், அளவு கடந்த வன்முறைகள்

கௌதம புத்தரை வணங்கி, அவரது சாசனங்களை பின்பற்றுகிறார்கள் என்பதனால் சிங்கள மக்கள் அமைதியை விரும்புபவர்கள், வன்முறையை வெறுப்பவர்கள் என்ற வடிவமே அவர்களைப் பற்றி பொதுவான வெளிப்பாடாகப் படுகிறது. இது அவர்களது முழுமையான வடிவம் அன்று.

கௌதமரின் போதனைகளுக்கு அமைய வன்முறையைத் தள்ளி, அமைதியை விரும்பும் பங்கு ஓரளவுக்கு அவர்களில் அமைந்துள்ளதானாலும், அந்தப் போர்க் காலங்களில் உள்ளே கட்டுப்படுத்த முடியாத முரட்டு தனமும் அவர்களில் உண்டு. சிங்கள இனத்தையும், பௌத்தத்தையும் பாதுகாக்க எந்த விதமான வன்முறையையும், எந்த அளவிலும் பாவிக்கலாம் என்று சிங்கள பாரம்பரியங்கள் பறைசாற்றுகின்றன. அந்தப் பாரம்பரியங்கள்தான் அவர்களது குருரம் நிறைந்த, அளவு கடந்த வன்முறைகளின் ஆணிவேர். தங்களது இனத்துக்கோ அன்றில் பௌத்தத்துக்கோ ஏற்படும் ஆபத்து உண்மையானதோ அன்றில் அவர்களின் ஆதங்கங்களில் எண்ணுவதாகவோ இருக்கலாம். ஆனால் அவற்றிற்கு எதிராக பாவிக்கப்படும் வன்முறைகள் எத்தகையதானாலும் அது நியாயப்படுத்தப்படுகிறது.

ஜே.வி.பியினரின் 1971ஆம் ஆண்டு வன்முறைகளின் நியாயத்தைப் பார்த்தால், அது, தாயகத்தையும் பௌத்த கலாச்சாரங்களை அடுத்த வாழ்வியலையும் ஏகாதிபத்திய சக்திகளிடமிருந்து பாதுகாப்பதற்குப் பாவிப்பதாக நியாயப்படுத்தினர். 1987 – 1989 காலங்களில் அமெரிக்க, இந்தியாவின் பட்டியலில் இருந்தும், தமிழ் மக்களின் பிரதேச வாதங்களில் இருந்தும் பாதுகாக்க எனப் பிரச்சாரப்படுத்தினர். அரசு பயங்கரவாதத்தைக் காரணம் காட்டி, அதுவே தங்களை இனத்தின், மதத்தின், காவலர்களாக, வன்முறையாளர்களாக ஆக்குவது என நியாயப்படுத்தினர். சிங்கள பௌத்தத்தின் போர்வை, சமாதானத்தை வெளிப்படுத்தும்போது தாங்களாகவே வன்முறைக்குப் போவதில்லை. ஆனால் அது ஏற்பட்டால், அதனை எவ்விதத்திலும் எதிர்கொள்ள வேண்டும் என்ற முரட்டுத்தனம் வெளிப்படும்.

பௌத்தர்கள் உணவுக்காக உயிர் பலி செய்வது இல்லை. ஆனால் கொல்லப்பட்ட மாமிசத்தைப் புசிப்பதில் தடை இல்லை; பாவம் இல்லை. கௌதம புத்தர் கூட மாமிசம் புசித்தவரே. இந்த வாதத்தை தான் அவர்களது வன்முறைக்கும் நியாயமாகத் தருவார்கள். ஆதலால் இனத்தையும் பௌத்தத்தையும் பாதுகாக்க எந்த வித வன்முறைகளையும் நியாயப்படுத்த தங்களது பாரம்பரியங்களை துணைக்கு அழைக்கிறார்கள்.

இந்துக்களின் பாரம்பரியத்தில் வாழ்வின் முடிவு காலங்களில் அவர்களை மோட்சத்துக்கோ நரகத்துக்கோ கொண்டு செல்ல எமன் வருவான். அவனது கின்கிரர்கள் வருவார்கள் என்று ஐதீகங்கள் உண்டு. ஆனால் சிங்கள, பௌத்த பாரம்பரிய ஐதீகங்களில் குற்றங்கள், பாவங்கள் செய்பவர்களை தண்டித்து நரகங்களுக்கு அனுப்ப, தங்களுக்கு யமக்கிரர்கள் போல் அதிகாரம் உண்டு என்பதனை கடைப்பிடிக்கிறார்கள். இது பற்றி அப்படியான தத்துவங்கள் அவர்களது புராணக் கதைகளிலும் ஓவியங்களிலும் தீட்டப்பட்டு, பாரம்பரியங்களாக இருக்கின்றன. இந்த தத்துவங்களே அரசுக்கு எதிராகவே ஜே.வி.பியை யமக்கிரர்களாகவே ஆக்கியது. அரசும் ஜே.வி.பியினரை அப்படியாகவே பார்த்தது.

உதாரணமாக, உலகத்திலேயே சிங்களவரின் தேசியக்கொடிதான் கொடூரமான சிங்கத்தைத் தன்னுள்ளே கொண்டிருப்பது மாத்திரமன்றி, அதனது கொடூரத்தை மேம்படுத்த, அந்த சிங்கம் தனது வலது பாதத்தில் வெட்டுவதற்கு ஆயத்தமான நிலையில் வாள் ஒன்றை வைத்திருக்கிறது. இந்த வடிவம் மகாவம்சத்தைப் பின்பற்றி அமைக்கப்பட்டது.

(வளரும்...)

காலைக்கதிர் Kalaikkathir

# சிங்களம் மட்டும் சட்டம் கொண்டுவந்ததாலேயே இனப் பாகுபாடு நாட்டில் ஏற்படத் தொடங்கியது!

## நீதியரசர் விக்னேஸ்வரன் எம்.பி. விளக்கம்

சிங்களம் மட்டும் சட்டம் கொண்டுவரப்பட்டதன் பின்னரே இன, மொழிப் பாகுபாடு நாட்டில் உருவானது. நான் சிறுவயதில் இருக்கும்போது எனது வீட்டுக்குப் பாண் கொண்டுவரும் சிங்கள இனத்தவர் யாழ்ப்பாணத் தமிழில் எம்முடன் பேசுவார். கொழும்பில் இருந்து என் தகப்பனார் வேலை செய்த சிங்கள பெரும்பான்மையினர் வசிக்கும் நகரங்களுக்கு நாங்கள் போகும் போது சிங்கள சகோதரர்களுடன் சிங்களத்தில் பேசுவோம். நாம் யாவரும் இலங்கையர் என்ற ஓர் எண்ணம் அப்பொழுது எல்லோரிடமும் இருந்தது. தற்போது ரிஷீ சுனக் தன்னை பிரித்தானியர் என்று அடையாளம் காட்டுகின்றமை போல் என் கல்லூரியில் படித்த தமிழர், சிங்களவர், முஸ்லிம்கள், மலேயர்கள், இந்திய வம்சா வழியினர், சீனர்கள் எல்லோரும் தம்மை இலங்கையர் என்றே அடையாளம் காட்டிக் கொண்டனர். நாம் யாவரும் மனதார அவ்வாறே உணர்ந்து கொண்டோம். பெருமையும் கொண்டிருந்தோம். 'சிங்களம் மட்டும்' சட்டம் வந்தவுடன் இந்த அந்நியோன்னியம் நீங்கியது. 'நாம்' என்று பன்மையில் ஒன்று சேர்ந்து குரல் கொடுத்தவர்கள் இப்பொழுது 'நான் சிங்களவன்' 'நீ தமிழன்' 'நீ முஸ்லிம்' 'நீ மலேயன்' 'நீ சீனாக்காரன்' என்று பேசத் தொடங்கிவிட்டார்கள்.

– இவ்வாறு நீதியரசரும் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான க.வி.விக்னேஸ்வரன் தனது வாரமொரு கேள்வி பதிலில் தெரிவித்துள்ளார். அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

**கேள்வி:-** தமிழர்களுக்கு இந்த நாட்டில் என்ன பிரச்சினை உண்டு என்று நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்த்தன கேட்டுள்ளார். அதற்குப்பதில் அளிப்பீர்களா?

**பதில் :-** சில அடிப்படை விடயங்களைப் புரிந்து கொண்டே சிங்கள அரசியல் வாதிகள் தமிழர்கள் பற்றி கேள்வி கேட்க வேண்டும். இலங்கைத் தமிழர்கள் பற்றி அறியாதவர்கள் கேள்வி கேட்டால் அரிவரி குழந்தைகளுக்கு அறிவுரை வழங்குவது போல அவற்றிற்குப் பதில் அளிப்பது ஒரு சிரமமான காரியம். தமிழர்களே இந்நாட்டின் ஆதிக் குடிகள். சிங்கள மொழி 1,400 வருடங்களுக்கு முன்னர்தான் பிறந்தது. அதற்கு முன்னர் இந் நாட்டில் சிங்களவர் என்று ஓர் இனம் இருக்கவில்லை.

நாடு சுதந்திரம் அடையும் வரையில் தமிழர்கள் இங்கு நாடு பூராகவும் பக்குவமாகவும் பாதுகாப்புடனும் வாழ்ந்தார்கள். சட்டத்தின் முன் யாவரும் சமமே என்ற நிலை ஆங்கிலேயர் காலத்தில் இருந்தது. ஆங்கில மொழி மக்களை ஒன்றிணைத்தது. கிராமங்களுள் பலருக்கு ஆங்கிலம் தெரியா விட்டாலும் கிராமத்தில், படித்த ஆங்கிலம் தெரிந்த ஒருவரிடம் இருந்து ஆவணங்களின் உள்ளடக்கங்களை கிராமத்தவர் அறிந்து கொண்டார்கள். தெற்கில் வாழ்ந்த தமிழர்கள் பலர் சிங்களம் தெரிந்து வைத்துக் கொண்டிருந்தார்கள். வடக்கில் வாழ்ந்த சிங்களவர்கள் தமிழ் மொழியைத் தெரிந்து வைத்துக் கொண்டிருந்தார்கள். நான் சிறுவனாய் இருந்த போது எங்களுக்குப் பாண், பணிஸ் ஆகியன கொண்டுவரும் சிங்களப் பாண்காரர் எங்களுடன் நன்றாகத் தமிழில் பேசுவார். அதுவும் யாழ்ப்பாணத் தமிழில் பேசுவார்.

கொழும்பில் இருந்து என் தகப்பனார் வேலை செய்த சிங்கள பெரும்பான்மையினர் வசிக்கும் நகரங்களுக்கு நாங்கள் போகும் போது சிங்கள சகோதரர்களுடன் சிங்களத்தில் பேசுவோம். நாம் யாவரும் இலங்கையர் என்ற ஓர் எண்ணம் அப்பொழுது எல்லோரிடமும் இருந்தது. தற்போது ரிஷிஸ்ரீ சுனக் தன்னை பிரித்தானியர் என்று அடையாளம் காட்டுகின்றமை போல் என் கல்லூரியில் படித்த தமிழர், சிங்களவர், முஸ்லிம்கள், மலேயர்கள், இந்திய வம்சா வழியினர், சீனர்கள் எல்லோரும் தம்மை இலங்கையர் என்றே அடையாளம் காட்டிக் கொண்டனர். நாம் யாவரும் மனதார அவ்வாறே உணர்ந்து கொண்டோம். பெருமையும் கொண்டிருந்தோம். 'சிங்களம் மட்டும்' சட்டம் வந்தவுடன் இந்த அந்நியோன்னியம் நீங்கியது. 'நாம்' என்று பன்மையில் ஒன்று சேர்ந்து குரல் கொடுத்தவர்கள் இப்பொழுது 'நான் சிங்களவன்' 'நீ தமிழன்' 'நீ முஸ்லீம்' 'நீ மலேயன்' 'நீ சீனாக்காரன்' என்று பேசத் தொடங்கிவிட்டார்கள்.

இன்று சிங்களவர்கள் பலர் கேட்கும் கேள்வி ஆங்கிலம் இருந்த இடத்தில் பெரும்பான்மை மொழியான சிங்களம் அதற்குப் பதிலாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. சிங்களம் எம் உள்ளூர் மொழி. முன்னர் போல் நாம் ஏன் இலங்கையர் என்று எம்மை அடையாளங் காட்ட மறுக்கின்றோம் என்பது வடக்கு, கிழக்கில் தமிழ்தான் பெரும்பான்மை மொழி; அங்கு ஏன் சிங்களத்தைத் திணிக்க வேண்டும் என்று அவர்கள் சிந்திப்பதில்லை.

நாங்கள் சேர்ந்து ஓர் இடத்துக்குச் செல்கின்றோம். அங்கு வாழ்பவர் பெரும்பான்மைத் தமிழர்கள். அங்கு சென்றதும் நாம் தமிழில் மட்டும் பேசத் தொடங்குகின்றோம். எம்முடன் வந்த சிங்களவர் எவ்வாறு அதைப் பார்ப்பார்கள்? 'அட! என் தமிழ் நண்பர் மாறிவிட்டாரே! என்னுடன் இப்பொழுது தமிழில் மட்டும் பேசுகின்றாரே' என்று மனவருத்தமடைய மாட்டாரா? ஏற்கனவே நாம் யாவரும் ஆங்கிலத்தில் உறவாடி வந்தோம். இப்பொழுது தமிழைத் திணித்தால் சகோதரர் ரோஹித அபேகுணவர்த்தன அதனை எவ்வாறு நோக்குவார்? இதனால்தான் சிங்கப்பூர் நான்கு மொழிகளுக்கு அரசியல் அந்தஸ்து வழங்கியது. சீன மொழி, மலாய் மொழி, தமிழ் மொழி மற்றும் ஆங்கிலம் ஆகிய நான்கு மொழிகளும் சிங்கப்பூரில் உத்தியோக பூர்வ மொழிகள். அதனால் எந்த சிங்கப்பூர் குடிமகனும் தன்னை நாடு ஒதுக்கி விட்டுள்ளது என்று நினைக்க வாய்ப்பில்லை. தான் இரண்டாந்தரக் குடிமகன் என்று நினைக்கவும் வாய்ப்பில்லை.

இலங்கையில் சிங்களம் மட்டும் சட்டம் கொண்டு வரப்பட்டதுமல்லாமல் நாட்டில் பரவலாக வாழ்ந்த தமிழ் மக்கள் கலகங்கள், காணி அபகரிப்பு, அரசாங்க தனி மொழிச்சட்டம் போன்ற பலவற்றின் காரணமாக சிங்களவர் பெரும்பான்மையாக வாழும் இடங்களில் இருந்து படிப்படியாக விரட்டி அடிக்கப்பட்டு தற்போது வடக்கு, கிழக்கில் மட்டும் தமிழ் பேசும் மக்கள் பெரும்பான்மையாக வாழும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

கொழும்பு தலைநகரம். அங்கு தமிழ் பேசுவோருக்கு ஓர் இடமிருப்பது இன ரீதியாகச் சிந்திக்கும் சிங்களவர்களுக்குத் தவிர்க்க முடியாத ஒரு பிரச்சினையாக மாறியுள்ளது. எனினும் 1958, 1983 ஆகிய வருடங்களில் தமிழரைப் பெரும்பாலும் கொழும்பிலிருந்து விரட்டவே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. பலர் வெளிநாடுகளுக்குச் சென்றுவிட்டார்கள். எனினும் சிங்களப் பெரும்பான்மையோரைக் கொண்ட கொழும்பு அல்லாத இடங்களில் தமிழரை இதுவரையில் விரட்டி அடித்து விட்டார்கள். அநுராதபுரத்தில் நடராஜா என்ற தமிழர் ஒருவரே தொடர்ந்து 17 வருடங்கள் நகர சபைத் தலைவராக என் இளம் பிராய வயதின் போது இருந்தார். அப்போது அநுராதபுரத்தில் பல தமிழர்கள் வாழ்ந்தார்கள். அவர்களில் 95 வீத சதவீதத்திற்கு மேற்பட்டவர்கள் அங்கிருந்து பல அரச செய்கைகளால் விரட்டப்பட்டுள்ளனர்.

சிங்களப் பிரதேசங்களில் இருந்து தமிழர்கள் விரட்டப்பட்டு பலர் அகதிகளாக வெளிநாடுகள் சென்று விட்டனர். சிலர் தமது பூர்வீக வடக்கு, கிழக்கு இடங்களுக்குச் சென்றுள்ளனர். இவர்கள் பலரை இங்கும் இருக்க விடாமல் போரின் போது விரட்டி அடித்தன சிங்கள அரசாங்கங்கள், இன்றும் வடக்கு, கிழக்கில் பெருவாரியாகப் படையினர் நிலை கொண்டிருக்கின்றனர். எமது காணிகள் அவர்கள் வசம். பயிரிட்டு பயன் பெறுகின்றனர். எமது வியாபாரங்கள் அவர்கள் வசம். சுற்றுலாப் பயணிகளுக்கு உணவகங்கள் ஒரு புறம். ஏ – 9 வீதியில் ஆங்காங்கே படையினர் அல்லது பொலிஸாரின் அனுசரணையுடன் தேநீர் கடைகள் மறுபுறம்.

பௌத்தர்கள் வாழாத இடங்களில் புத்த விகாரைகள் கட்டப்படுகின்றன. தமிழர்களின் மக்கட் தொகையைக் குறைக்கும் வண்ணம் நில ஆக்கிரமிப்புக்களும் சிங்களக் குடியேற்றங்களும் நடைபெறுகின்றன.

எமது மீனவர்களை தமது பாரம்பரிய மீன்பிடி இடங்களில் மீன் பிடிக்க விடாமல் தடுத்து தெற்கிலிருந்து வரும் மீனவர்களுக்கு மீன் பிடிக்க விட்டிருக்கின்றனர் படையினர். பல இடங்களில் அவர்கள் சட்டத்துக்கு முரணான முறையில் மீன் பிடித்து தெற்கிற்கு அனுப்புகின்றனர். வருமானத்தை தாம் எடுக்கின்றனர். எமது மீனவர்கள் பல விதத்திலும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளனர். சுதந்திரம் அற்று வாழ்ந்து வருகின்றனர். தமது பாரம்பரிய வாழ்வாதாரத்தை இழந்து நிற்கின்றனர்.

கடற்கரையோரக் காணிகள் தமக்கு வேண்டும் என்று கூறி சிங்கள மாகாணங்களிலிருந்து தமிழ் மாகாணங்களுக்குள் ஊடுருவி வடக்கு, கிழக்கு தமிழர்களின் தாயகத்தைப் பிரித்து எமது தொடர் இருப்பை இல்லாதாக்குவதற்கு அரசாங்கங்களாவன, புத்த பிக்குகள் மேலும் படையினரின் உதவியுடன் அரும்பாடுபட்டு வருகின்றன.

காணி அபகரிப்புக்கள் அரச உதவியுடன் திணைக்களங்களாலும் மகாவெலி சபை போன்றவற்றாலும் நாளாந்தம் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. வைத்தியசாலைகளில் போதுமான மருத்துவ வசதிகள் இல்லை. மருந்துகள் இல்லை.

எமது கல்வித்தரம் நாட்டின் மாகாணங்களுக்குள் மிக மோசமான நிலையை எட்டியுள்ளது. முன்னர் முன்னணியில் நின்றோம். இப்பொழுது கடைசி நிலையில் நிற்கின்றோம்.

மாகாண சபைகளை இயங்க விடாது எம்மை மத்திய சிங்கள அரசாங்கமே ஆண்டுகொண்டிருக்கின்றது. நாட்டின் மற்றைய பாகங்கள் யாவும் நவீன நிலையை அடைந்திருக்கும் நிலையில் தமிழர் வாழ் பிரதேசங்கள் முன்னேற்றத்தைக் காணவிடாமல் அடக்கி, ஒடுக்கி வைக்கப்பட்டுள்ளன.

முக்கியமாக நாம் கவனிக்க வேண்டியவை இரண்டு விடயங்கள். பொருளாதார மந்த நிலைப்பாட்டின் காரணமாக நாட்டின் மற்றைய இடங்களில் மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளுக்கு மேலதிகமாக நாம் எமது பாரம்பரிய காணிகளை இழந்து கொண்டிருக்கும் இழிநிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். முதலில் கொழும்பில் இருந்தும் மற்றைய மாகாணங்களில் இருந்தும் தமிழர்கள் விரட்டப்பட்டார்கள். இன்று வடகிழக்கில் இருந்தும் அவர்களை விரட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. ஆகவே படிப்படியாகத் தமிழர்களை இந்த நாட்டை விட்டு



விரட்டவும் அவர்களை அடிமைகளாக்கவுமே நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

இப்பொழுது தமிழர் இடங்களில் சிங்களவர்களை வாழவிடுகின்றார்கள் இல்லை என்று ரோகித போன்றவர்கள் அங்கலாய்க்கின்றனர். முன்னர் சிங்களவர் வாழ் இடங்களில் இருந்து தமிழர்களை விரட்டாது இருந்திருந்தார்களேயானால் இவ்வாறு கூறலாம். எம்மை அங்கிருந்து விரட்டி விட்டு எவ்வாறு நாம் வாழும் வீட்டுக்கு வந்து எமது வீட்டினுள் நுழைய முடியவில்லையே என்று அங்கலாய்க்கிறார்கள் ரோகித போன்றவர்கள். ரோகித அபேகுணவர்த்தன தமிழர்களுக்கு என்ன பிரச்சினை என்று கேட்கின்றார். சுருக்கமாக எமது பிரச்சனைகளைப் பட்டியலிட்டு கூறுகின்றேன்.

நாட்டின் பல பாகங்களிலும் இருந்து விரட்டி அடிக்கப்பட்ட தமிழர்கள் இப்பொழுது வடக்கு கிழக்கு மாகாணங்களில் இருந்து விரட்டி அடிக்கப்படுகின்றார்கள்.

பெருவாரியான படையினர் எம்மை மெய்நிகராகச் சிறைப்படுத்தி வைத்துள்ளார்கள். காணிகள், விவசாய நிலங்கள், வணிக நிலையங்கள், சுற்றுலா மையங்கள் அவர்கள் வசம் அல்லது அவர்கள் மேற்பார்வையின் கீழ் இயங்கி வருகின்றன. எமது சுதந்திரம் பறி போய் விட்டது. எமது பெண்கள் பாதுகாப்பற்ற நிலையில் வாழ்கின்றார்கள்.

1. தமிழர்களுக்கு வேலை வாய்ப்பு இல்லை.
2. போதைப் பொருள் பாவனையை வடக்கு கிழக்கில் இங்கிருந்து மர்மக்கரங்கள் ஊக்குவித்துக் கொண்டிருக்கின்றன.
3. தமிழர்கள் பொருளாதார விருத்தி அடைய அரசாங்கமே முட்டுக்கட்டையாக விளங்குகின்றது.
4. மருத்துவ வசதிகள் வெகுவாகக் குறைந்த நிலையிலேயே எமது மருத்துவர்கள் இங்கு கடமையாற்றி வருகின்றார்கள்.
5. கல்வி நிலை தேக்கமுற்று இருக்கின்றது.
6. மாகாணசபை இயங்காததால் மாகாணக் கல்வி நிலையங்கள் போன்றவை மேற்பார்வை அற்று இயங்குகின்றன.
7. உள்நாட்டு மீனவர்களின் வேலைகளை வெளியில் இருந்து வந்தவர்கள் ஆக்ரமித்துள்ளார்கள்.
8. எமது உற்பத்திப் பொருள்கள் சந்தைப் படுத்த முடியாத நிலையில் இருக்கின்றனர்.
9. வெளிநாட்டு முதலீடுகள் இங்கு வருவதை மத்திய அரசாங்கம் கட்டுப்படுத்தித் தம் வசம் வைத்திருக்க முயலுகின்றது.
10. சீனர்களின் நிலைப்பாடு இங்கு பெருக அரசாங்கம் வழி செய்து கொடுக்கின்றது. இது வருங்காலத்தில் எம்மைப் பாதிக்கப் போகின்றது.
11. உரம் இல்லாததால் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது. பொருள்களின் விலையேற்றத்தால் உற்பத்தி விலை பல மடங்காக உயர்ந்துள்ளது.
12. வேலை வாய்ப்பு இல்லாததாலும் பொருள்களின் விலையேற்றத்தாலும் இளைஞர்கள், யுவதிகளால் குற்றங்கள் பல புரியப்படுகின்றன. அவற்றை இங்கு குடி கொண்டிருக்கும் பெரும்பான்மை சிங்களப் பொலிஸார் எந்தளவுக்குத் தடுக்கின்றார்கள் என்பதில் சந்தேகமே உருவாகியுள்ளது. அவர்கள் பிள்ளைகளையுங் கிள்ளித் தொட்டிலையும் ஆட்டிக் கொண்டிருக்கின்றார்கள்.

போக்குவரத்துப் பாதைகள் சீர் பண்ணப்படாது மிக மோசமான நிலையில் காணப்படுகின்றன.

பொருள்களின் விலைகள் கட்டுக்கடங்காது அதிகரிக்க மக்களின் வருமானம் குறைந்து கொண்டே செல்கின்றது.

போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நஷ்ட ஈடு வழங்கப்படவில்லை. பாதிக்கப்பட்டவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கப்படவில்லை. போரால் பாதிக்கப்பட்ட மக்களின் நிலை கவலைக்கிடமாக இருக்கின்றது.

இவ்வாறு பல பிரச்சனைகளை எமது மக்கள் எதிர் நோக்கும் போது வடக்கு கிழக்குத் தமிழர்களுக்கு என்ன பிரச்சினைகள் என்று கேட்பது வியப்பை அளிக்கின்றது.

தமிழர்களுக்கிருக்கும் முக்கிய பிரச்சினை அவர்களைச் சிங்களவர்கள் ஆளுகின்றார்கள் என்பதே. இதற்கு ஒரேயொரு தீர்வு கூட்டுசமஷ்டி முறையில் நாட்டின் அரசியல் யாப்பைத் தயாரித்து நம்மை நாமே ஆள இடமளிப்பதாகும். கிழக்கில் முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளை நாம் பேசித்தீர்த்து வைப்போம். – என்று தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir

# அரசு காணிகளைக் கையகப்படுத்துகின்ற செயற்பாடுகளை உடன் நிறுத்தவேண்டும்!

## துரைரெட்னம் கோரிக்கை




அரசாங்கம் வடக்கு கிழக்கை எடுப்பார் கைப்புள்ளைகள் போன்று பார்க்காமல் உடனடியாக இந்தக் காணிகளைக் கையகப்படுத்தும் செயற்பாடுகளை நிறுத்த வேண்டும் என முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இரா.துரைரெட்னம் கோரிக்கை விடுத்துள்ளார்.

முன்னாள் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் இரா.துரைரெட்னம் கலந்து கொள்ளும் ஊடக சந்திப்பு மட்டு.ஊடக அமையத்தில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் –

வடக்கு, கிழக்கைப் பொறுத்தவரையில் மாகாண சபை முறைமை தமிழ் மக்களினுடைய அரசியல் தீர்வு தொடர்பான விடயங்களில் கடந்த 30 வருடங்களுக்கு மேலாகத் தமிழ் மக்களுக்கு ஆரம்பகட்டமாக மாகாண சபை முறைமை அறிமுகப்படுத்தப்பட்டு இருக்கின்றது.

இலங்கை அரசாங்கமும் இந்திய அரசாங்கமும் முடிவெடுக்கின்ற நிலையில் மாகாண சபை முறைமை பல வருடங்களில் அமுலாக இருந்தும் வடக்கு கிழக்கு நிர்வாகங்கள் தனியாக செயற்பட்ட நிலையில் தென்னிலங்கை பகுதியில் மக்கள் பிரதிநிதிகளை திட்டமொன்று செயல்படுத்தா வண்ணம் கடந்த காலத்தில் இருந்து வந்தனர்.

இலங்கை அரசாங்கத்தைப் பொறுத்தவரையில் இந்திய அரசாங்கத்தால் சர்வதேச ரீதியாக சர்வதேச மட்டத்துக்கு மாகாண சபை முறைமை கொண்டு செல்லப்பட வேண்டும் இலங்கையில் அமுல்படுத்தப்பட வேண்டும். வடக்கு கிழக்கில் அமுல்படுத்தப்பட வேண்டும் என்னும் கோரிக்கையை இந்திய அரசாங்கம் ஒரு வலுவான நிலையில் இன்று ஐ.நா வரையும் கொண்டு சென்றுள்ளது.

இந்த விடயத்தில் இலங்கை அரசாங்கம் சொவிசாய்த்து வடக்கு கிழக்கில் மட்டுமல்ல முழு இலங்கையிலும் மாகாண சபை முறைமையை அமுல்படுத்தி வடக்கு கிழக்கில் சிறுபான்மை மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஆரம்ப வடிவமாக மாகாண சபை முறைமை அமுல்படுத்தி அதற்கான தேர்தலையும் விரைவாக நடத்தி ஆக்கபூர்வமான செயல் வடிவத்தைக் கொடுக்க வேண்டும்.

வடக்கு கிழக்கில் தற்போது சுமுகமான ஒரு நிலை ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. இந்தச் சந்தர்ப்பத்தில் இலங்கை அரசாங்கத்தால் யாழ்.குடா நாட்டில் வலிவடக்கு பகுதியில் ஆயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட காணிகளைக் கையகப்படுத்துவதற்கான செயற்பாடுகளை அரசு முடக்கி இருக்கின்றது.

இந்த விடயத்தைக் கைவிட்டு, வடக்கு கிழக்கில் இலங்கை அரசாங்கம் மேற்கொள்கின்ற காணி தொடர்பான செயற்பாடுகளை உடனடியாக நிறுத்த வேண்டும். காரணம் இலங்கை அரசாங்கத்துக்கு உரிய படைகளுக்கு ஏன் காணிகளை பெறுகின்றார்கள் என எனக்குத் தெரியவில்லை.

முப்படைகளுக்கும் வடக்கு கிழக்கில் சுமுகமான நிலை இருக்கின்றபோது வடக்கு கிழக்கில் ஏன் முப்படைகளுக்கான காணி பெறப்பட வேண்டும் ஏன் கையகப்படுத்தப்பட வேண்டும் மீண்டும் ஒரு யுத்தம் ஆரம்பிக்கப்பட போகின்றதா? அல்லது இராணுவம் வேறு ஏதும் திட்டமிட்ட செயற்பாடுகளை ஆரம்பித்து இருக்கின்றதா?... அல்லது வடக்கு கிழக்கில் தமிழர் பிரதேசங்களில் பொதுவான காணிகள் இருக்கக் கூடாது என்பதற்கான செயல் வடிவங்களை தொடங்கி இருக்கின்றதா?

மத்திய அரசாங்கம் வடக்கு கிழக்கை எடுப்பார் கைப்புள்ளைகள் போன்று பார்க்காமல் உடனடியாக இந்த காணிகளை கையகப்படுத்தும் செயற்பாடுகளை வடக்கு, கிழக்கில் நிறுத்த வேண்டும். – எனத் தெரிவித்தார்.

# இலங்கைக்காக நிதி சேகரிப்பு திட்டத்தை ஆரம்பித்தது ஐ.நா.



இலங்கை தற்போது முகங்கொடுத்திருக்கும் பொருளாதார நெருக்கடியின் விளைவாக மிகமோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவும் நோக்கில் 'இலங்கையை மீளக் கட்டியெழுப்பல்' என்ற மகுடத்தில் நிதிசேகரிப்புத்தளமொன்றை ஆரம்பித்திருக்கும் ஐக்கிய நாடுகள் அபிவிருத்திச்செயற்திட்டம், அத்தளத்திற்குத் தம்மால் இயன்ற நிதியை வழங்குவதன் ஊடாக இலங்கை மக்களுக்கு உதவமுன் வருமாறு உலக மக்களிடம் கோரிக்கை விடுத்திருக்கின்றது.

இது தொடர்பாகத் தெளிவுபடுத்தி ஐக்கிய நாடுகள் அபிவிருத்திச்செயற்திட்டத்தால் வெளியிடப்பட்டிருக்கும் அறிக்கையிலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்து சமுத்திரத்தின் முத்தாக அறியப்படும் இலங்கை இப்போது மிக மோசமான பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்திருக்கின்றது.

கடந்த 1948 ஆம் ஆண்டின் பின்னரான காலப்பகுதியில் இலங்கை முகங்கொடுத்திருக்கும் மிகப்பாரிய நெருக்கடி இதுவாகும்.

இதன்விளைவாக பல மில்லியன் கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டிருப்பதுடன், மொத்த சனத்தொகையில் சுமார் 57 லட்சம் மக்கள் உடனடி மனிதாபிமான உதவிகள் தேவைப்படுகின்ற துரதிஷ்டவசமான நிலையில் இருக்கின்றனர். அதுமாத்திரமன்றி சுமார் 63 லட்சம் மக்கள் அவர்களின் அடுத்தவேளை உணவு எங்கிருந்து கிடைக்கப்பெறும் என்று தெரியாத நிலையில் உள்ளனர்.

எனவே இந்நிலைவரம் தொடர்ச்சியாக மோசமடைந்துவரும் பின்னணியில், நாம் இலங்கை மக்களுக்கு உதவுவதற்கான ஏனைய முயற்சிகளில் ஒன்றாக நிதி சேகரிப்பு பிரசாரமொன்றை ஆரம்பித்திருக்கின்றோம். இதனூடாக தற்போது இலங்கை மக்கள் முகங்கொடுத்திருக்கும் நெருக்கடியின் தீவிரத்தன்மையைக் குறைப்பதற்கு எதிர்பார்க்கின்றோம்.

உணவு மற்றும் சுகாதாரம் ஆகிய இரண்டும் இந்தப் பொருளாதார நெருக்கடியால் வெகுவாகப் பாதிக்கப்பட்ட இரு துறைகளாகக் காணப்படுகின்றன. நிரம்பல் சங்கிலி சீர்குலைந்திருப்பதுடன் குறிப்பிட்ட சில அத்தியாவசிய மற்றும் அத்தியாவசியமற்ற மருந்துப்பொருள்களைப் பெற்றுக்கொள்வதில் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன.

அதன்விளைவாக நாடளாவிய ரீதியில் வழமையான சில சத்திரசிகிச்சைகளைத் தாமதப்படுத்தவேண்டிய நிலையேற்பட்டுள்ளது. இவை மக்களை வெகுவாகப் பாதித்திருக்கும் பின்னணியில், இலங்கையை மீளக்கட்டியெழுப்புவதற்கு சர்வதேச உதவிகள் அவசியமாகின்றன.

அதன்படி இலங்கையர்களுக்கு உதவுவதற்கு எமக்கு உங்களுடைய உதவி தேவைப்படுகின்றது.

இலங்கையில் மிகமோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள பின்தங்கிய தரப்பினருக்கு அவசியமான உதவிகளை வழங்குவதில் நீங்களும் பங்களிப்புச்செய்யமுடியும். அதன்படி 'இலங்கையை மீளக் கட்டியெழுப்பல்' என்ற மகுடத்தில் எம்மால் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிதிசேகரிப்புத்தளத்திற்கு உங்களால் இயன்ற நிதியுதவியை வழங்கலாம்.

வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ள இலங்கை மக்களுக்கு அவசியமான உதவிகளை உலகின் பலதரப்பட்ட நாடுகளைச் சேர்ந்த மக்களிடமிருந்து திரட்டிக் கொள்ளும் நோக்கிலேயே இந்நிதி சேகரிப்புத்தளம் உருவாக்கப்பட்டுள்ளது.

இதனூடாகத் திரட்டப்படும் நிதி இலங்கையில் தட்டுப்பாடு நிலவும் அத்தியாவசிய மற்றும் அத்தியாவசியமற்ற மருந்து மற்றும் மருத்துவ உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்கும், விவசாயிகளுக்கு அவசியமான விதைகளைப் பெற்றுக்கொடுப்பதற்கும், குடும்பங்களிடையே வீட்டுத்தோட்ட செய்கை முறையை ஊக்குவிப்பதற்கு அவசியமான உபகரணங்களை வழங்குவதற்கும் பயன்படுத்தப்படும் என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஜப்பான் தூதுவர் மலையகம் விஜயம்



மலையகத்துக்கு விஜயம் மேற்கொண்ட இலங்கைக்கான ஜப்பான் தூதுவர் மிசுகோஷி ஹிடேகி உள்ளிட்ட குழுவினர் இலங்கை தொழிலாளர் காங்கிரஸுடன் சந்திப்புக்களை மேற்கொண்டார்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் அழைப்பின் பேரில் விஜயம் செய்த அவர், முதலில் கொட்டகலையில் உள்ள காங்கிரஸ் தொழிலாளர் ஸ்தாபனத்துக்கு விஜயம் மேற்கொண்டார்.

அங்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உறுப்பினர்களுடன் கலந்துரையாடிய அவர், மலையக இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்குவது தொடர்பிலும் கலந்துரையாடினார். அதன் பிறகு, ஹற்றனில் உள்ள தொண்டமான் தொழிற்பயிற்சி நிலையத்துக்கு விஜயம் மேற்கொண்ட அவர், அங்கு இடம்பெறும் பயிற்சிநெறிகளைப் பார்வையிட்டதுடன், இந்திய அரசாங்கத்தின் நிதி உதவியுடன் கட்டி முடிக்கப்பட்ட நவீன கட்டடத் தொகுதியையும் பார்வையிட்டார்.



அதன்பின் தொழில்பயிற்சி நிலையத்தில் அறிமுகப்படுத்தியுள்ள ஜப்பானிய மொழி கற்கைநெறிகளை மேலும் விருத்தி செய்யவும், இங்கு பயிற்சி பெற்ற இளைஞர், யுவதிகளுக்கு ஜப்பானில் தொழில் வாய்ப்புகளை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுப்பது தொடர்பிலும், புலைமை சார்ந்த தொழில் துறையை அபிவிருத்தி செய்வது சம்பந்தமாகவும் ஜப்பான் தூதுவர் மிசுகோஷி ஹிடேகி உள்ளிட்ட குழுவினர் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடினார்.

மேலும், மறைந்த தலைவர் அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் காலம் முதல் இன்று வரை இலங்கை தொழிலாளர் காங்கிரஸுக்கும் ஜப்பானுக்கும் இடையிலான நட்புறவு தொடர்பாகவும், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் செய்து வரும் சேவைகள் தொடர்பாகவும் இதன் போது ஜப்பான் தூதுவர் பாராட்டுகளையும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தவிசாளரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஸ்வரன் மற்றும் கட்சியின் பிரதிநிதிகள், பிரதேச சபை தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# புகைப்பிடிப்பவர்களின் எண்ணிக்கை இலங்கையில் 9.1 வீதத்தால் குறைவு

இலங்கையில் புகைப்பிடிப்பவர்களின் எண்ணிக்கை 9.1 சதவீதத்தால் குறைவடைந்துள்ளதாக புகையிலை மற்றும் மதுசாரம் தொடர்பான தேசிய அதிகார சபை தெரிவித்துள்ளது.

அத்துடன், புகைப்பிடிப்பவர்களில் 51 சதவீதமானவர்களில் அதிலிருந்து விலகுவார்கள் என தாம் நம்புகிறோம் என அந்த சபையின் தலைவர் வைத்தியர் சமாதி ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

வர்த்தக நிலையங்களில் சிகரெட் சில்லறை விலைக்கு உள்ளதே அவர்களுக்கு அதிலிருந்து விடுபட தடையாக இருப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## நீதியைப் பெற்றுக்கொடுக்க ....................

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றுக்கொடுக்கவும் அரசாங்கம் துரிதமாகச் செயற்பட வேண்டும் என இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சங் வலியுறுத்தியுள்ளார்.

நீதி, சிறைச்சாலை விவகாரங்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி விஜயதாஸ ராஜபக்ஷவிற்கும், இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங்கிற்கும் இடையில் நீதியமைச்சில் சந்திப்பொன்று இடம்பெற்றது.

அரசாங்கத்தின் தற்போதைய செயற்பாடுகள் மற்றும் நெருக்கடி நிலைமைகளை சமாளிக்க கையாளும் நகர்வுகள் குறித்தும் இரு தரப்பினரும் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டுள்ளனர்.

பல்வேறு சவால்களுக்கு மத்தியிலும் இலங்கையில் ஜனநாயகத்தை வலுப்படுத்துவதற்காக அரசமைப்பின் 21 ஆவது திருத்தச் சட்டமூலம் நிறைவேற்றப்பட்டமைக்காகவும், சட்ட முறைமையை புதுப்பிப்பதற்கு பல புதிய சட்டங்களை ஏற்றுக்கொண்டமைக்காகவும் தூதுவர் ஜூலி சங் தனது பாராட்டுக்களைத் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக இலங்கையில் ஊழலை தடுப்பதற்காக தற்போதைய அரசாங்கம் புதிய ஊழல் எதிர்ப்பு சட்டத்தை கொண்டு வருவதற்கும் பொருளாதார நெருக்கடியை போக்குவதற்கும் எடுத்துள்ள நடவடிக்கைகளை தூதுவர் பாராட்டியுள்ளார்.

மேலும், வடக்கு கிழக்கு மக்களுக்கு நிவாரணம் வழங்கும் நோக்கில் முன்னெடுக்கப்படும் நலன்புரித்திட்டங்கள் மற்றும் நடமாடும் சேவைகள் மூலம் அவற்றின் முன்னேற்றம் ஆகியவற்றையும் தூதுவர் பாராட்டியமையுடன், நல்லிணக்கத்தை வலுப்படுத்தவும், பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீதியை பெற்றுக்கொடுக்கவும் அரசாங்கம் துரிதமாக செயற்பட வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து தெளிவுபடுத்தியுள்ள அமைச்சர் விஜயதாஸ, யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீதி பொறிமுறையை அரசாங்கம் முன்னெடுத்து வருவதாகவும், காணாமல் போனவர்கள் தொடர்பான அனைத்து விசாரணைகளும் அடுத்த ஆண்டு டிசம்பர் 31ஆம் திகதிக்குள் நிறைவடையும் எனவும் தெரிவித்துள்ளார்.

மேலும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன எனவும், வடக்கு, கிழக்கில் காணி விடுவிப்புகள் விரைவில் இடம்பெறும் எனவும் தெரிவித்துள்ளார். அத்துடன் புதிய அரசமைப்பின் ஊடாக இனப்பிரச்சினைக்கான தீர்வுகளை காண வேண்டியது அவசியம், அதற்கான நடவடிக்கைகளையும் அரசாங்கம் முன்னெடுக்க தயாராக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.




## மைத்திரிக்கு ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடுத்து, அவர் கொழும்பு ஐ.டி.எச். வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக சென்றுள்ளார். அங்கு நடத்தப்பட்ட பரிசோதனையில் மைத்திரிபால சிறிசேனவுக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.






காலைக்கதிர் Kalaikkathir

# கல்முனை விவகாரத்தில் ஒருதலைப்பட்சமாக தீர்மானம் எடுக்க ஒருபோதும் இடமளிக்கோம்!

## மாநகர முதல்வர் ஏ.எம்.றகீப் உறுதி

(கே எ ஹமீட்ஷ்)
கல்முனை, நவ.05

கல்முனை விவகாரத்தில் முஸ்லிம்களின் இணக்கப்பாடின்றி ஒருதலைப்பட்சமாக தீர்மானம் எதுவும் எடுப்பதற்கு ஒருபோதும் இடமளிக்க மாட்டோம் என்று கல்முனை மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் உறுதியளித்துள்ளார்.

நிந்தவூர் பிரதேச செயலகத்தில் அரசாங்க அதிபர் தலைமையில் இடம்பெற்ற கூட்டம் கல்முனை விவகாரம் சம்பந்தப்பட்டதல்ல. அது பெரிய நீலாவணையிலுள்ள ஒரு கிராம சேவகர் பிரிவு தொடர்பிலான சர்ச்சைக்குத்தீர்வு காண்பதற்கான கலந்துரையாடலே என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம்.ஹரீஸால் கல்முனையில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே மேற்படி விடயம் பற்றி முதல்வர் தெளிவுபடுத்தியுள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்; -

கல்முனை உப செயலக பிணக்கு தொடர்பில் நாங்கள் மௌனம் காத்து வருகிறோம் எனச் சிலர் குற்றச்சாட்டி வருகின்றனர். இது 30 வருட காலமாக புரையோடிப்போயிருக்கின்ற பிரச்சினையாகும். இதனை எடுத்தோம் கவிழ்த்தோம் என்று ஒரே இரவில் தீர்த்து விட முடியாது. முஸ்லிம், தமிழ் சமூகங்கள் சம்பந்தப்பட்ட இந்த நீண்ட கால பிணக்கு தொடர்பில் இரு சகோதர சமூகத்தினரும் சுமுகமாக பேச்சு நடத்தி, இணக்கமான தீர்வொன்றைக் காண வேண்டியிருக்கிறது.

நாங்களும் இதற்கான நகர்வுகளை மிகவும் சாணக்கியமாக உயர் மட்டங்களில் செய்து கொண்டுதான் இருக்கிறோம். எமது தரப்பு நியாயங்களை உரிய இடங்களில் முன்வைத்து வருகின்றோம். இவற்றையெல்லாம் நாங்கள் ஊடக செய்திகளுக்காக பிரஸ்தாபிப்பதில்லை. எல்லாவற்றையும் வெளிப்படையாகச் சொல்லி விடவும் முடியாது. இது விடயமாக ஊடகங்களில் எமது தரப்பு செய்திகளைக் காணக் கிடைக்கவில்லை என்பதற்காக நாங்கள் எதுவும் செய்யாமல் மௌனமாக இருக்கிறோம் என்று அர்த்தமாகி விடாது.

எமது நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம்.ஹரீஸ், தனது தலையாய கடமையாக இதனைச் சுமந்து கொண்டு, மிகுந்த அர்ப்பணிப்புடன் தீவிர முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றார். சகோதர தமிழ் பிரதிநிதிகள் என்ன சொல்கிறார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். ஹரீஸ் என்றொரு எம்.பி. இல்லாதிருந்தால் நாங்கள் நினைத்தது போன்று எப்போதோ சாதித்திருப்போம் என்று அவர்கள் கூறி வருகின்றனர். ஆக, எவரும் நினைத்தது போன்று செய்து விடாமல், இரு தரப்பினரதும் இணக்கத்துடனேயே இப்பிணக்கு தீர்க்கப்பட வேண்டும் என்பதில் குறியாக இருந்து செயற்படுகின்றோம் என்பதைப் புரிந்து கொள்ளலாம்.

இந்த விடயத்தில் எமது தலைவர் ரவூப் ஹக்கீம் மிகப் பொறுப்புணர்வுடன் தெளிவான நிலைப்பாட்டைக் கொண்டிருக்கிறார். இந்த விவகாரம் தொடர்பான நகர்வுகளின் போது அவர் எமது எம்.பி. ஹரீஸுக்கு பக்கபலமாக இருந்து செயலாற்றி வருகின்றார்.

அதேவேளை, கல்முனை பிரச்சினை தொடர்பில் தீர்வு காண்பதற்காக நிந்தவூர் பிரதேச செயலகத்தில் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் கூட்டமொன்று இடம்பெற்றதாக ஒரு வதந்தி கிளப்பி விடப்பட்டிருக்கிறது. இது முழுப் பூசணிக்காயை சோற்றுக்குள் மறைப்பது போன்று அப்பட்டமான பொய்யாகும். உண்மையில் அங்கு நடந்தது என்ன ?

எமது கல்முனை மாநகர சபை எல்லைக்குள் இரண்டு கிராம சேவகர் பிரிவுகள் தொடர்பிலான பிரச்சினை இருந்து வருகின்றது. அதில் ஒன்று - பெரிய நீலாவணை- 02 தமிழ், முஸ்லிம் கிராம சேவகர் பிரிவு சம்பந்தப்பட்ட விடயமாகும்.

கல்முனையிலுள்ள கிராம சேவகர் பிரிவுகள் தொடர்பிலான 2001 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட அரச வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் பெரிய நீலாவணை பகுதியில் பெரிய நீலாவணை-01, பெரிய நீலாவணை-01ஏ, பெரிய நீலாவணை-01பி, பெரிய நீலாவணை-02 ஆகிய நான்கு பிரிவுகளும் கல்முனை உப பிரதேச செயலக நிர்வாகத்தின் கீழ் காணப்படுகின்றன.

அதேபோல் இந்த வர்த்தமானியின் பிரகாரம் பெரிய நீலாவணை-01 முஸ்லிம் பிரிவு, பெரிய நீலாவணை-02 முஸ்லிம் பிரிவு ஆகிய இரண்டு கிராம சேவகர் பிரிவுகளும் கல்முனை பிரதேச செயலக நிர்வாகத்தின் கீழ் இருக்கின்றன.

இவற்றை விட, அந்த வர்த்தமானியில் பெரிய நீலாவணை- முஸ்லிம் பிரிவு 71/ஏ ஆம் இலக்க கிராம சேவகர் என்றொரு பிரிவும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஆனால் அந்த கிராம சேவகர் பிரிவைக் காணவில்லை. அது எங்கே? இதுகால வரையும் அந்தக் கிராம சேவகர் பிரிவு ஒளித்து வைக்கப்பட்டிருக்கிறது. இது தொடர்பில் நாங்கள் ஆராய்ந்தபோது பெரிய நீலாவணை- 02 தமிழ் பிரிவினுள் மேற்படி 71/ஏ எனும் கிராம சேவகர் பிரிவும் உள்வாங்கப்பட்டு, அது பெரிய நீலாவணை- 02 தமிழ், முஸ்லிம் பிரிவு என மாற்றம் செய்யப்பட்டிருப்பதைக் கண்டறிந்தோம்.

இந்தக் கிராம சேவகர் பிரிவில் 841 முஸ்லிம் குடும்பங்களும் 241 தமிழ் குடும்பங்களும் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. இவை இணைக்கப்பட்டே பெரிய நீலாவணை- 02 தமிழ், முஸ்லிம் பிரிவு உருவாக்கப்பட்டு, மிகவும் சூட்சுமமாக கல்முனை உப பிரதேச செயலக நிர்வாகத்தின் கீழ் கொண்டு செல்லப்பட்டிருக்கிறது.

இதனால் குறித்த முஸ்லிம் குடும்பங்கள் தமது கிராம சேவை நிர்வாக விடயங்களை மேற்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். இவ்வாறு அநீதியிழைக்கப்பட்ட முஸ்லிம் குடும்பங்களுக்கு தீர்வுபெற்றுக் கொடுப்பதற்கான எனது முயற்சியின் ஓர் அங்கமாக அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபருக்கு ஒரு கடிதத்தை அனுப்பி, தெளிவுபடுத்தியிருந்தேன். எனது வேண்டுகோளை நேரடியாக விசாரித்து, பரிசீலிப்பதற்காகவே நிந்தவூர் பிரதேச செயலகத்தில் அவர் கூட்டத்தை ஒழுங்கு செய்திருந்தார்.

அதில் அரசாங்க அதிபருடன் மேலதிக அரசாங்க அதிபர், அம்பாறை மாவட்ட உதவித்தேர்தல் ஆணையாளர், கல்முனை பிரதேச செயலாளர் மற்றும் உப பிரதேச செயலாளரும் நானும் பங்கேற்றிருந்தோம். அங்கு குறித்த கிராம சேவகர் விவகாரம் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டது. இதன்போது என்னால் முன்வைக்கப்பட்ட நியாயங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு, ஒரு கிராம சேவகர் பிரிவை உருவாக்குவதற்கான சாதக நிலைமை எட்டப்பட்டிருக்கிறது.

இது தவிர இஸ்லாமாபாத்தில் உள்ள தனியார் காணியொன்று பற்றிய முறைப்பாடு தொடர்பிலும் அரசாங்க அதிபர் கள விஜயம் மேற்கொண்டு, நிலைமையை ஆராய்ந்து, உரிய தீர்வை வழங்கியிருந்தார்.

இவற்றுடன் கல்முனை உப செயலக சர்ச்சையை தொடர்புபடுத்தி, தகவல்களை திரிவுபடுத்தி முகநூல்களில் சிலர் புரளியைக் கிளப்பி விட்டிருக்கின்றனர். தயவுசெய்து இவ்வாறு வதந்திகளைப் பரப்பி, மக்களைக் குழப்ப வேண்டாம் என சம்பந்தப்பட்டவர்களை அன்பாய் வேண்டிக்கொள்கின்றேன்.

மேற்படி நிந்தவூர் கூட்டத்தில் கல்முனை உப பிரதேச செயலகம் தொடர்பிலோ எல்லைகள் பற்றியோ எதுவும் பேசப்படவில்லை. மாவட்ட அரசாங்க அதிபரின் நிகழ்ச்சி நிரலில் இந்த விடயம் இருக்கவில்லை. ஹரீஸ் எம்.பி. பங்குபற்றாத எந்தவொரு கூட்டத்திலும் கல்முனை விவகாரம் உத்தியோகபூர்வமாக பேசப்படவோ தீர்மானம் எதுவும் மேற்கொள்ளப்படவோ மாட்டாது என்பதை உறுதியாக தெரிவித்துக்கொள்கின்றேன்.

கல்முனை விவகாரத்தை சிறப்பாகக் கையாள்வதற்கான தகுதியும் அறிவும் ஆற்றலும் அனுபவமும் எம்மிடம் இருக்கிறது. இது விடயத்தில் நாங்கள் ஒருபோதும் சோடை போக மாட்டோம் என்பதையும் பொறுப்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்- என்று கல்முனை மாநகர முதல்வர் ஏ.எம்.றகீப் மேலும் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் கல்முனை மாநகர சபை உறுப்பினர்களான எம்.எஸ்.உமர் அலி, எம்.எம்.நிஸார், ஏ.எம்.சித்தி நஸ்ரின், முன்னாள் உறுப்பினர் ஷரீப் முஸ்தபா, நாடாளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம்.ஹரீஸின் இணைப்பு செயலாளர் நௌபர் ஏ.பாவா, கல்முனை 12ஆம் வட்டார மு.கா. வேட்பாளர் எம்.பளீல் உள்ளிட்டோரும் பங்கேற்றிருந்தனர்.

# மின்சாரம் தாக்கி பலியான தொழிலாளியின் குடும்பத்துக்கு 40 லட்சம் ரூபா இழப்பீடு!

பதுளை - பசறை - கணவரல்ல தோட்டம் ஈ.ஜி.கே பிரிவில் மின்சாரம் தாக்கி உயிரிழந்த தமிழரசன் கணேசமூர்த்தியின் குடும்பத்தினருக்கு 40 லட்சம் ரூபா நஷ்டஈட்டு தொகை வழங்கப்பட்டது.

இதற்கான காசோலையை இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான், இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தவிசாளரும், நிதி செயலாளரும், நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ராமேஸ்வரன் ஆகியோர் பாதிக்கப்பட்ட குடும்பத்தினரை நேரில் சென்று பார்வையிட்டு கலந்துரையாடிய பின் காசோலையை வழங்கி வைத்தனர்.

தோட்டக் கம்பனி ஒன்றுக்குச் சொந்தமான கனவரல்ல தோட்டத்தில் வசித்து வந்த தமிழரசன் கணேஷமூர்த்தி என்ற 25 வயதுடைய தொழிலாளி ஒருவர் கடந்த மாதம் 09ஆம் திகதி மின்சாரம் தாக்கி உயிரிழந்திருந்தார்.

அத்துடன், மின்சாரம் தாக்கியே அவரது மரணம் ஏற்பட்டுள்ளதாக, பதுளை சட்ட வைத்திய அதிகாரியின் பிரேத பரிசோதனை அறிக்கையில் உறுதி செய்யப்பட்டுள்ளது. இவர் சாதாரண தொழிலாளி எனவும் மின்சார பராமரிப்புப் பணியை செய்ய வற்புறுத்தப்பட்டார் எனவும் தெரிவிக்கப்பட்டது.

பின்னர், அந்த இளைஞனின் மரணம் தொடர்பில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பிரதிநிதிகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு சுட்டிக்காட்டியதோடு பாதிக்கப்பட்டுள்ள குடும்பத்தாருக்கு நியாயமான இழப்பீட்டுத் தொகை ஒன்று வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையையும் தொழில் அமைச்சரிடம் முன்வைத்தனர்.

அதற்கு பதில் அளித்த தொழில் அமைச்சர் மனுஷ நாணயக்கார, கூடிய விரைவில் இழப்பீட்டுத் தொகை வழங்கப்படும் என வாக்குறுதி அளித்திருந்தார்.

அதற்கமைய உயிரிழந்த தமிழரசன் கணேச மூர்த்தியின் குடும்பத்தினருக்கு 40 லட்ச ரூபா நஷ்ட ஈடு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மூடப்பட்டுள்ள பொருளாதார மத்திய நிலையங்களை திறக்க நடவடிக்கை!

## மஸ்தான் தெரிவிப்பு



மூடப்பட்டுள்ள பொருளாதார மத்திய நிலையங்களைத் திறப்பதற்கு நடவடிக்கைஎடுக்கப்பட்டுள்ளதாக கிராமிய பொருளாதார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் கே.காதர் மஸ்தான் தெரிவித்தார்.

வவுனியா, மதவுவைத்தகுளம் பகுதியில் உள்ள பொருளாதார மத்திய நிலையத்தை பார்வையிட்ட பின் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

அரசாங்கத்தால் பல மில்லியன் ரூபாக்கள் செலவு செய்து பொருளாதார மத்திய நிலையங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. அதனை அந்த மாவட்ட மக்களோ அல்லது ஏனைய மக்களோ பயன்படுத்தாது சேதமடைந்து வருகிறது. எமது அமைச்சுக்குட்பட்ட பொருளாதார மத்திய நிலையங்கள் மூடப்பட்டு உள்ளன.

மக்கள் பாவனைக்கு விடுவதற்காக நேரடியாகச் சென்று அந்தப் பொருளாதார மத்திய நிலையங்களில் என்ன பிரச்சினை என ஆய்வு செய்து வருகின்றேன். இதன்பின் அரச அதிபர் மற்றும் ஏனைய அரச அதிகாரிகள், வியாபாரம் செய்பவர்கள் ஆகியோருடன் கதைத்து விரைவாக திறப்பதற்கு ஏற்பாடுகளை செய்து வருகின்றோம். ஏனைய மாவட்ட பிரச்சினை வேறு. இங்கு வேறு பிரச்சினை. பொருளாதார மத்திய நிலையத்துக்குரிய கடைகளை இன்னும் வழங்கவில்லை. விவசாயிகள், மரக்கறி விபாபாரிகள் ஆகியோருக்கு இதனை வழங்குவது தொடர்பாக கவனம் செலுத்தப்படும் எனத் தெரிவித்தார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 05.11.2022இல் வெளியிடப்பெற்றது.